அரசு ஊழியர்

**மாத இதழ்**

**2024 டிசம்பர்**

**மலர்:45 இதழ்:12**

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக**

அச்சிட்டு வெளியிடுபவர்: **மு.அன்பரசு**

ஆசிரியர்: **ஆ.செல்வம்**

ஆசிரியர் குழு:

**மு.அன்பரசு, மு.பாஸ்கரன், தெ.வாசுகி, இரா. மங்களபாண்டியன், கோ.பழனியம்மாள், சி.பரமேஸ்வரி, சா.டானியல் ஜெயசிங், சா.கோதண்டபாணி, அ.குபேரன்**

இதழ் வடிவமைப்பு: ஆர்.காளத்தி
9677003178



**முகவரி:**

பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
மின்னஞ்சல் : arasuoozhiyar@gmail.com



**அச்சகம்:**

சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,
19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,
எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை,
சென்னை - 600002

**ஆண்டுச் சந்தா : ரூ.200**
**தனி இதழ் : ரூ.20**



இந்த இதழ் குறித்த தங்களின் மேலான கருத்துக்கள் விமர்சனங்கள் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை மேற்கண்ட முகவரிக்கு, மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும். தகுதியானவை பரிசீலிக்கப்பட்டு அரசு ஊழியர் இதழில் வெளியிடப்படும்.

இதழுக்கு அனுப்பும் கதைகள் கவிதைகள், கட்டுரைகள், கருத்துக்கள் விமர்சனங்களை பிரசுரிக்கவும், நிராகரிக்கவும், சுருக்கி வெளியிடவும் ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.


# உள்ளே...


1. **போர் பறை முழங்குவோம்! விடியல் பாதை அமைப்போம்!**
   *தலையங்கம்* ....4
2. **தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்ற போராட்டங்களால் மட்டுமே மாற்றங்கள் சாத்தியம்!**
   *பொதுச் செயலாளர் மேசையிலிருந்து* ....6
3. **மாநாடு! நமக்கு சொல்லப்போகும் சங்கதி...** ....11
4. **ஒன்றிணைந்த வலிமையான போராட்டக் களமே இழந்துவிட்ட உரிமைகளை மீட்டெடுக்கும் பேராயுதம்!** ....13
5. **வாசகர் கடிதம்** ....17
6. **நமது போராட்டங்களே நம்மை பாதுகாக்கும்** ....18
7. **அரசு மருத்துவர்கள் அலட்சியமாக இருப்பதாக ஏன் தோன்றுகிறது?** ....19
8. **தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 15 ஆம் மாநில மாநாடு** ....22
9. **மாவட்ட மாநாடுகள்** ....23
10. **வாசகர் கடிதம்** ....31
11. **இயக்கம் அழைக்குது வா தோழா** ....32
12. **கடல் புகும் நதியாவோம்...** ....33
13. **தி ரேடியோலாஜிகல் அசிஸ்டென்ட்ஸ் அசோசியேசன் TRAA மகளிர் கருத்தரங்கம்** ....34

12. **“அஞ்சலி** ....34

தலையங்கம்

# போர் பறை முழங்குவோம்! விடியல் பாதை அமைப்போம்!

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பாக மதுரையில் நடைபெற்ற போராட்ட ஆயத்த மாநாட்டில் அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் இன்றைய முதல்வர் பங்கேற்று திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைத்தால் அரசு ஊழியர்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என உறுதி அளித்தார். சட்டமன்ற தேர்தல் அறிக்கையிலும், தேர்தலின் போது நடைபெற்ற பிரச்சாரக் கூட்டங்களிலும் பழைய ஓய்வூதியத்தை கொண்டு வருவோம் மற்றும் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும் என்றும் வாக்குறுதி அளித்தார். 2021 டிசம்பர் 17, 18, 19 தேதிகளில் சென்னையில் நடைபெற்ற 14ஆம் மாநில மாநாட்டில் முதல்வராக திரு. மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்கள் நமது அழைப்பினை ஏற்று பங்கேற்று சிறப்பித்தார். அவருடைய மாநாட்டு உரையில் அரசு ஊழியர்கள் கோரிக்கைகள் நிதிநிலைமை சரி செய்து படிப்படியாக நிறைவேற்றுவோம். நீங்கள் கவலைப்பட வேண்டியது இல்லை. நான் உங்களில் ஒருவன் தேர்தல் கால வாக்குறுதிகள் நிச்சயம் நிறைவேற்றுவேன் என உறுதியளித்தார் முதல்வர் தான் அளித்த வாக்குறுதியின் படிப்படியாக நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவார் என்று நம்பிக்கையோடு காத்திருந்தோம்.

ஆனால் பழைய ஓய்வூதியம் சாத்தியம் இல்லை என்ற நிதியமைச்சரின் அறிவிப்பு இந்த அரசிற்கு கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான எண்ணம் இல்லை என்பதை அறிவிக்கக்கூடிய நிகழ்வாகவே அது அமைந்திருந்தது. நிதியமைச்சரின் சட்டமன்ற உரையை கண்டித்து நம்முடைய போராட்டங்களை நாம் நடத்தினோம் தொடர்ந்து நம்முடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத சூழலில் ஜாக்டோ ஜியோ சார்பில் நடைபெறக்கூடிய மாநாட்டில் பங்கேற்க அழைப்பதற்காக முதல்வரை சந்தித்தபோது, “நான் உங்களது சில கோரிக்கையாளாவது நிறைவேற்றிவிட்டு தான் எந்த மாநாட்டிற்கும் வருவேன்” என உறுதி அளித்தார். இந்நிலையில் ஜாக்டோ ஜியோ சார்பில் வாழ்வாதார நம்பிக்கை மாநாடு 10.9.22 அன்று நடைபெற்றது. அவரும் நம்முடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு பங்கேற்று பேருரையாற்றினார். ஜாக்டோ ஜியோ வாழ்வாதார மாநாட்டில் பங்கேற்று பங்கேற்று உரையாற்றிய போது திமுகவின் வெற்றி அரசு ஊழியர் ஆசிரியர்களால் கிடைத்த வெற்றி என்பதை மறக்காமல் கூறி, தேர்தல் கால வாக்குறுதிகளை மறுக்கவில்லை, மறைக்கவில்லை, மறக்கவும் இல்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு உங்களுடைய நியாயமான கோரிக்கைகளை கண்டிப்பாக நிறைவேற்றி தரும் என இப்போதும் நான் உறுதியளிக்கிறேன் என நம்பிக்கை விதைத்து சென்றார்.

ஆனால் இன்று வரை அவர் கொடுத்த நம்பிக்கையை காப்பாற்றாமல் கொடுத்து வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் உள்ள நிலையே தொடர்கிறது. பல கட்ட போராட்டங்களை இந்த அரசுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக, தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான போராட்டங்களை நடத்தியுள்ளோம். இழந்த உரிமைகளை பெறுவதற்காக மாவட்ட தலைநகரங்களில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் பிரச்சார இயக்கம் கோட்டை முற்றுகை போராட்டம் என ஏராளமான போராட்டங்களை அறிவித்து நடத்தி இருக்கின்றோம். நம்முடைய நியாயமான கோரிக்கைகளை, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாத இந்த அரசுக்கு நினைவூட்டும் விதமாக 11.4.2021 அன்று ஜாக்டோ ஜியோ அமைப்பின் சார்பாக பிரம்மாண்டமான கோட்டை முற்றுகை போராட்டத்தை நடத்தி, கொடுத்து வாக்குறுதியை மறந்து விட்ட முதல்வருக்கு நினைவூட்டல் செய்ய முடிவு செய்திருந்தோம். நம்முடைய கோட்டை முற்றுகையை அறிவிப்பு அறிவிப்பை வெளியிட்டு அதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்த வேளையில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு.ஏ.வா வேலு திரு. தங்கம்

தென்னரசு மற்றும் அன்பில் மகேஷ் ஆகியோர் முன்னிலையில் 8.4.2023 அன்று ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர் உடன் பேச்சுவார்த்தை நடைபெறும் என அழைப்பு வந்தது. அந்த அழைப்பை ஏற்று அவர்களுடன் நடைபெற்ற அந்த பேச்சுவார்த்தை நம்பிக்கை அளிக்கும் விதமாக இருந்தது. நம்முடைய கோரிக்கைகளை அக்கறையுடன் கேட்டு அவை குறித்து முதல்வரிடம் தெரிவித்து சாதகமான பதிலை முதல்வர் அறிவிப்பதற்கான முயற்சிகளை செய்வதாக மாண்பு அமைச்சர்கள் கூறியதன் அடிப்படையில் நம்முடைய கோரிக்கைகள் அந்த சட்டமன்ற கூட்டத்தொடர் முடிவதற்கு முன்பாகவே வெளியாகும் என்ற நம்பிக்கையை தெரிவித்து அதுவரை நம்முடைய முற்றுகை போராட்டத்தை தள்ளி வைப்பது என முடிவு செய்தோம்.

இந்த பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட உடன்பாட்டின் படி அமைச்சர்கள் தங்களுடைய வாக்குறுதிகளை முதல்வரிடம் தெரிவித்து நம்முடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கான எந்த விதமான நடவடிக்கும் எடுக்காமல் பல மாதங்கள் காத்திருந்து அந்த நம்பிக்கை பொய்த்தப் பின் 28.12.2023 அன்று பிரம்மாண்டமான கோட்டை முற்றுகையை நாம் நடத்தினோம். இவ்வாறு நம்முடைய உரிமைக்கான, நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான போராட்டங்களை திட்டமிடுவதும் ஊழியர்களை ஒன்று திரட்டி போராட்டங்களை நடத்துவதும் போராட்டங்கள் வீறு கொண்டு எழுவதை தடுப்பதற்காக பேச்சு வார்த்தைகளை, தமிழ்நாடு அரசு நடத்துவதும் நம்பிக்கை அளிப்பதும், நம்பிக்கை அளித்து நாம் அந்த வாக்குறுதியை ஏற்று நம்முடைய போராட்டங்களை நிறுத்தி வைப்பதும் நீண்ட ஒரு இடைவெளிக்கு பிறகு அந்த நம்பிக்கை பொய்த்தபின் மறுபடியும் போராட்டங்களை முடிவெடுப்பதும் அந்த போராட்டங்களை நடத்துவதற்கான திட்டமிடலும் வலிமையான போராட்டம் நடத்துவதும் இப்படி தொடர்ச்சியான நிகழ்வுகள் நடந்திருக்கின்றது. இந்த ஆட்சியாளர்கள் தங்களுடைய வாக்குறுதிகளை நிறைவேற்ற கவனத்தை ஈர்ப்பதற்கான போராட்டங்கள் என நாம் நடத்திய போராட்டங்கள் நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான எந்தவிதமான வாய்ப்பையும் ஏற்படுத்தாத ஒரு நிலை தான் இன்று வரை தொடர்கிறது. இந்த ஆட்சி அமைந்து பெரும் பகுதி ஆட்சி காலத்தை கடந்துவிட்ட நிலையில் நம்முடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதது மிகப்பெரிய நம்பிக்கை இன்மையை, இந்த அரசு நம்மை ஏமாற்றி இருக்கிறது. என்ற எண்ணத்தை இன்று தமிழகம் முழுவதும் அரசு ஊழியர்களிடையே உருவாக்கி இருக்கின்றது.

இனிமேலும் இந்த அரசு நம்முடைய கோரிக்கைகளை அல்லது அவர்களுடைய வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையை வைத்து காத்திருப்பது நம்முடைய கோரிக்கைகளை, உரிமைகளை பெறுவதற்கான மிகப்பெரிய தடையாக அமைந்து விடும் என்ற என்ற நிலைப்பாட்டிற்கு வருவது பொருத்தமான நகர்வாக இருக்கும்.

இந்நிலையில் நம்முடைய சங்கத்தின் 15 ஆம் மாநில மாநாடு டிசம்பர் 13, 14 தேதிகளில் தூத்துக்குடியில் நடைபெற உள்ளது. இந்த மாநாடு நம்முடைய நம்பிக்கையை பெற்று ஆட்சி அமைத்து தொடர்ந்து நம்பிக்கைகளை விதைத்து ஆனால் எந்த கோரிக்கையும் நிறைவேற்றாத ஒரு அரசிடம் இருந்து நம்முடைய உரிமைகளை பெறுவதற்கான வலிமையான போராட்டங்களின் மூலமாக பெறுவதற்கான அறிவிப்புகளை வெளியிடக்கூடிய மாநாடாக இது அமைய உள்ளது. அரசு தன்னுடைய தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையோடு காத்திருப்பதற்கான காலம் முடிந்து விட்டதாக நாம் அறிவிக்க வேண்டிய மாநாடாக அமைய உள்ளது. மாநாட்டிலே எடுக்கக்கூடிய அறைகூவல் தீர்மானங்கள் இந்த ஆட்சியாளர்களின் எண்ணங்களை மாற்றி அமைக்க கூடியதாக, நம்முடைய கோரிக்கைகளை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்ற தவிர்க்க முடியாத கட்டாயத்தையும், அதனுடைய நியாயத்தை உணர்த்துவதாகவும் நம்முடைய எதிர்கால இயக்கங்கள் தீர்மானிக்க உள்ளோம்.

அத்தகைய சிறப்புமிகு மாநாட்டிலே அலைகடலென பங்கேற்போம் போர் பறை முழங்குவோம்! விடியல் பாதை அமைப்போம்!

**- ஆசிரியர் குழு.**

# தேர்தல் கால வாக்குறுதியை நிறைவேற்ற போராட்டங்களால் மட்டுமே மாற்றங்கள் சாத்தியம்!

தோழர்களே...! நமது குறிக்கோள் என்பது காலக் கெடு கொண்ட கனவுதான் அதை செய்து முடிக்கும் வரை செய்ய முடியாதது போல் தான் இருக்கும் பழமையில் தூர பயணம் ஓர் அடியில் தான் துவங்குகிறது. என்பதைப் போல நம்முடைய குறிக்கோள்களை அடைய இம் மாநாட்டில் திட்டமிட்டு அடியெடுத்து வைப்போம்...!"

2026 சட்டமன்றத் தேர்தலுக்கான கூட்டணி பேரங்கள் துவங்கி விட்டனர். தேர்தலுக்கான ஏற்பாடுகளில் அரசியல் கட்சிகள் தீவிரமாய் இறங்கிவிட்டனர் சொன்ன வார்த்தைகள் கொடுத்த உறுதிமொழிகள் பற்றி எந்த அசைவும் அரசாங்கத்திடம் இல்லை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சொன்ன வார்த்தைகள் பழைய ஓய்வு திட்டம் நிச்சயம் அமல்படுத்தப்படும் சரண்டர் வரையறுக்கப்பட்ட ஊதியம் காலிப் பணியிடங்கள் நிரப்புதல் போன்றவை நிச்சயம் நிறைவேற்றப்படும். என்ற முதல்வரின் வாக்குறுதிகளும்.

இதுநாள் வரை நிறைவேற்றப்படவில்லை இனிமேலாவது நிறைவேற்றப்படுமா என்ற நம்பிக்கையும் பொய்த்துப் போய்விட்டது. 40 ஆண்டுகள் முடிந்து 41 வது வருடங்களை கண்டிருக்கிற இந்த இயக்கம் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பழைய ஓய்வு திட்டத்தை திரும்பக் கொண்டு வருவதற்கான களத்தில் நின்று சமரசமற்ற முறையில் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கிறது. எந்த அரசியல் கட்சிகளும் அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை என்பதைத்தான் அரசாங்கத்தின் செயல்பாடுகளில் இருந்து உணர்த்துகிறது. இது தங்களின் நியாயமான உரிமைகளுக்காக போராடும் ஒவ்வொரு இயக்கத்தின் தன்மானத்தை உரசிப் பார்க்கும் செயலாகும் கிட்டத்தட்ட இது ஒரு நம்பிக்கை துரோகம் தீவிரமானதொரு கிளர்ச்சிக்கு ஊழியர் சமுதாயத்தை உந்தி தள்ளி கொண்டு இருக்கிறது என்பதை உணர்த்தும் நேரம் வந்துவிட்டது.

எத்தகைய இடர்பாடுகள் ஏற்பட்டாலும் அரசு ஊழியர்கள் தங்கள் முன்வைத்த போராட்டங்களை உரிமைகளை வென்று முடிக்கும் வரை பின்வாங்க மாட்டார்கள் என்பதை அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் நிருபித்து காட்ட வேண்டிய நேரம் நெருங்கி நம் கண் முன் நிற்கிறது புதிய உரிமைகளை போராடி பெறுவதற்கு உருவாக்கப்பட்ட இயக்கம் இன்றைய சூழலில் இருக்கின்ற உரிமைகளை தக்க வைத்துக் தக்க வைத்துக் கொள்ளுவேன் கடுமையாக நின்று போராட வேண்டி இருக்கிறது பழைய ஓய்வூதிய திட்டத்தை திரும்ப பெறுவதற்காக கடந்த 20 ஆண்டுகளாக போராடிக் கொண்டிருக்கிறோம் ஊதிய முரண்பாட்டை தீர்க்க வேண்டும் என்று கோரிக்கையை ஒரு தலைமுறையாக நிலுவையில் வைக்கப்பட்டு இருக்கிறது காலி பணியிடங்கள் நிரப்ப வேண்டும் என்ற முறையீடுகள் தொடர்ந்து முற்றாக நிராகரிக்கப்பட்டு இன்று 6 லட்சம் காலிப் பணியிடங்கள் அரசு துறையில் காலியாக விடப்பட்டுள்ள அவலம் தொடர்ந்து கொண்டிருக்கிறது அந்த ஆறு லட்சம் ஊழியர்களின் பணிகளை இப்போது பணியில் உள்ள அரசு ஊழியரா ஆகிய நாம் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் மன அழுத்தத்திற்கு மத்தியிலும் அந்த பணியை சுமந்து கொண்டிருக்கிறோம்.

6 லட்சம் தமிழ இளைஞர்களின் எதிர்காலமும் வாழ்வாதாரமும் இதன் மூலம் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது என்ற சமூகநீதி கோட்பாட்டையும் அரசாங்கத்தின் முன் வைத்து போராடுகிறோம் ஆனால் எந்த அரசாங்கமாக இருந்தாலும் சமூக நீதியை பற்றி தமிழக இளைஞர்களின் எதிர்காலம் பற்றி அக்கறை கொள்வதாக இல்லை அதற்கு மாறாக அவுட்சோர்சிங் அரசாணைகளை வெளியிட்டு இட ஒதுக்கீடு கொள்கைகளை இழுத்து மூடவும் அரசுத்துறைகளை தனியார் மையமாக்கும் நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்வது தான் முனைந்துள்ளனர் தமிழக அரசு. தேர்தல் வாக்குறுதி என்ற பொய்யான அறிக்கையின் மூலம் அரசு ஊழியர் ஆசிரியர்கள் தொழிலாளர்கள்

விவசாயிகள் போன்ற அனைத்து நிரப்பு உழைக்கும் மக்களின் அவரது குடும்பத்தாரின் ஓட்டுக்களை பெற்று ஆட்சியில் அமர்ந்ததும் நம்பிக்கை துரோகங்களை நாக்கூசாமல் செய்து வருகின்றனர் அப்படிப்பட்ட அரசியல் தலைவர்களை தான் நாம் பார்த்து வருகிறோம்.

அரசு ஊழியர்கள் தொடர்ந்து வலியுறுத்துவரும் நியாயமான கோரிக்கையில் ஒன்றைக் கூட இந்த அரசாங்கம் நிறைவேற்றாதது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என அரசு ஊதியம் பெறும் அனைவரையும் மிகுந்த ஏமாற்றத்தில் ஆழ்த்தியுள்ளது நிறைவேற்றப்படாத கோரிக்கைகள் சில புதிய ஓய்வு திட்டத்தை திரும்ப பெறாதது ஒன்றிய அரசு புதிய ஓய்வு திட்டத்தை அறிவித்த போது அதை இந்தியாவிலேயே முதலாவதாக அறிவித்த மாநிலமாக தமிழ்நாடு இருந்தது தற்போது சில மாநிலங்கள் புதிய ஓய்வு திட்டத்தினை திரும்ப பெற நடவடிக்கை எடுத்து வரும் நிலையில் ஓய்வூதிய நிதி ஒழுங்காற்று மற்றும் மேம்பாட்டு ஆணையத்தில். (PFRDA) சேராத தமிழ்நாடு அரசு பழைய ஓய்வு திட்டத்தை கொண்டு வர மறுப்பதற்கு எந்த சிக்கலும் தற்போது இல்லை ஆனால் இது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் மௌனமாக இருப்பது அவர் கொடுத்த வாக்குறுதிகளை காற்றில் பறக்க விடும் செயலாகும் 2003 ஆம் ஆண்டு முதல் அரசு ஊழியர் செலுத்தி வரும் பங்களிப்பு ஓய்வு திட்டத்திற்கு 10 சதவீத ஊதியத்தை அரசு இதுவரை பங்களிப்பு ஓய்வு திட்டத்தின் ஒழுங்காற்று ஆணையத்திடம் செலுத்தாத சூழலில் புதிய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துவதான அம்சம் என்பது அந்தந்த மாநில அரசுகள் முடிவு செய்ய வேண்டிய விஷயம் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ள நிலையில் பழைய ஓய்வு திட்டத்தை தமிழ்நாட்டில் முதல்வர் இன்னும் மௌனம் காப்பது அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களில் கொந்தளிப்பான மனநிலைக்கு தள்ளி உள்ளது. வாக்குறுதி அளித்தபடி சத்துணவு ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்காதது. சத்துணவு ஊழியர்கள் சிறப்பு கால முறை ஊதியம் பெற்று வருகிறார்கள் அவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதிய வழங்கப்படும் என்று 2011 2016 மற்றும் 2021 தேர்தல்களில் வாக்குறுதிகள் அளிக்கப்பட்டு அவை இன்னும் நிறைவேற்றப்படாமலே உள்ளது. சிறப்பு கால முறை ஊதியம் பெறக்கூடியவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் நிர்ணயிக்காது.

அங்கன்வாடி ஊழியர்கள் கிராம பஞ்சாயத்து செயலாளர் மற்றும் அனைத்து துறைகளின் பணிபுரியும் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்று வரும் ஊழியர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும் என்று தனி கோரிக்கை வைக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சட்டமன்றத்தில் வெளியிடப்பட்ட சட்டமன்ற விதி எண் 110 இன் கீழான அறிக்கையில் இதுகுறித்து ஊதிய மாற்றத்திற்கான பரிந்துரைகளை மேற்கொள்ளும் அலுவலர் குழு பரிசீலித்து அறிக்கை தாக்கல் செய்யும் என தெரிவிக்கப்பட்டிருந்தது சென்ற ஆட்சியில் செயல்படாத இந்த கோரிக்கையை தற்போது பொறுப்பேற்றிருக்கும் முதல்வர் செயல்படுத்துவதாக வாக்குறுதி அளித்து இருந்தார் ஆனால் அது குறித்தும் இதுவரை எந்த அறிவிப்புகளும் வெளியாகவில்லை. சாலை பணியாளர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பணி வரன்முறை செய்து 41 மாத ஊதிய இழப்பை வழங்கிட வைக்கப்பட்ட கோரிக்கை பரிசீலிக்கப்படாமல் உள்ளது. 2002ல் அதிமுக தலைமையிலான அரசின் முடிவினால் பத்தாயிரம் சாலை பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர் இதனால் மன உளைச்சலுக்கும் வேலையின்மைநிலைக்கும் ஆளானவர்கள் சிலர் மன நோயாளியாகினர்

41 மாதங்கள் கழித்து மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர் 41 மாதங்கள் வேலையில்லாமல் கடன் வாங்கி குடும்பத்தை வறுமை நிலையில் நடத்தி வந்த சாலை பணியாளர்களின் நிலையை கருத்தில் கொண்டு அவர்களின் 41 மாத பணி நீக்க காலத்தை பனிக்காலமாக கருதி அவர்களுக்கு 41 மாத ஊதியத்தை வழங்கிட அரசுக்கு பல்வேறு தரப்பிலிருந்தும் கோரிக்கை முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்படாமல் இருந்த நிலையில் தற்பொழுது உயர் நீதிமன்றம் பணிக்க காலத்தை பணிக்காளமாக அறிவித்துள்ள நிலையில் தமிழக அரசு உடனடியாக பணிக்களமாக வரவேண்டும் என்று செய்து அரசாணை வெளியிட வேண்டும். சரண் விடுப்பு ஒப்படைப்பு மறு உத்தரவு வரும்வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

சரண் விடுப்பு ஒப்படைப்பு என்பது அரசு ஊழியர்கள் காலகாலமாக தங்கள் விடுப்பை சரண் செய்து பெற்றுக் கொள்ளும் தொகையாகும் பண்டிகை காலங்களுக்கும்

குழந்தைகளுக்கு பள்ளிக்கூட கட்டணங்களுக்கும் தொடர்ந்து மருத்துவச் செலவுக்கு என்று அரசு ஊழியர்கள் பயன்படுத்திய உரிமை தொகையை கொரோனாவை காரணம் காட்டி கடந்த இரண்டு ஆண்டுகளாக நிறுத்தி வைத்ததை அரசு ஊழியர்கள் ஏற்றுக்கொண்ட நிலையில் அதை எந்த ஆண்டில் இருந்து மறு உத்தரவு வரும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது அரசு ஊழியர்களுக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியாகும் சரண்டர் விடுப்பு அகவிலைப்படி போன்றவற்றையெல்லாம் நிறுத்தக்கூடாது என்று கொரோனா காலத்திலேயே மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது கடந்த அரசிடம் உடனடியாக வழங்க வேண்டும் சொன்ன முதல்வர் தற்போது அதை கால வரை குறிப்பிடாமல் நிறுத்தி வைத்துள்ளது எந்த வகையிலும் நியாயமானதல்ல அதனால் சரண் விடுப்பு ஒப்படைப்பு செய்ய விதிக்கப்பட்டு இருக்கும் தடையை உடனடியாக நீக்க வேண்டும்.

21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை இதுவரை வழங்காமல் உள்ளது. ஐஏஎஸ் ஐபிஎஸ் அதிகாரிகளுக்கு 1.1.2016 முதல் ஊதியமாற்றம் பெற்று விட்டார்கள் ஊதிய நிலுவையை பாக்கியன்றி பெற்று விட்டார்கள். மக்கள் பிரதிநிதிகளாய் இருக்க கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் முதல் கேபினட் அமைச்சர்கள் வரை 100% சம்பள உயர்வு பெற்றுவிட்டனர்.

நீதிபதிகளுக்கும் 1.1.2016 முதல் ஊதிய நிலுவைத் தொகை பெற்றுவிட்டார்கள் அரசாங்கத்தின் உயர் பதவியில் உள்ளவர்கள் மட்டும் ஒரு பைசா வைக்காமல் ஊதிய மாற்ற நிலுவைகள் பெரும்போது அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மட்டும் அது வழங்கப்படாதது சமத்துவம் சம உரிமை பேசும் மக்களாட்சி தத்துவத்திற்கு விரோதமானதாகும். எனவே தமிழக முதல்வர் இந்த கோரிக்கையில் உள்ள நியாயத்தை உணர்ந்து 1 .1. 2016 முதல் அனைத்து அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் ஊதிய மாற்ற நிலுவைத் தொகை வழங்கிட வேண்டும்.

தனியார் மயம் அரசாணைகள் ரத்து செய்தல் அரசுத் துறைகளை தனியார் மூலமாகக்கும் வகையில் தமிழகத்தில் உள்ள இளைஞர்களின் வேலைவாய்ப்பை தடுக்கும் வகையில் வெளியிடப்பட்ட அரசாணைகள் அனைத்தும் ரத்து செய்யப்பட வேண்டும். அரசுத் துறையில் அவுட்சோர்ஷ் செய்யும் முறை மற்றும் ஆட்குறைப்பு நடவடிக்கை கைவிட வேண்டும். புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் இன்றைய அரசாங்கங்கள் தாங்கள் மக்களுக்கு செய்ய வேண்டிய சேவைகளை தனியார் வசம் ஒப்படைப்பதன் மூலம் தங்களுக்கான கடமைகள் இருந்தும் ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களை தாய் உள்ளத்தோடு தாங்கிப் பிடிக்கும் தர்மத்தில் இருந்தும் விலகிக் கொள்ள நினைக்கின்றனர்.

அரசாங்கம் என்ற சேவை மையம் தனியார் மையம் என்ற லாபம் ஈட்டும் நிறுவனங்களிடம் அடகு வைக்கப்படும் போக்கை தான் இது காட்டுகிறது அரசாங்க வேலைக்கு ஆள் எடுப்பதில் அறிவிக்கப்படாத தடை ஓய்வுறுதல் மற்றும் பனிக்காலத்தில் இறந்து விடுதல் போன்ற காரணங்களினால் ஏற்படும் காலியிடங்களை நிரப்பாமல் விட்டுவிடுதல் புதிய பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாதது தேவைப்படும் இடங்களில் தற்காலிக ஊழியர்களை நியமித்துக் கொள்ளுதல் வேலை முடிந்ததும் அவர்களை விரட்டி விடுதல் ஒப்பந்த முறையில் ஊழியர்களை அமர்த்துதல் அவுட்சோர்சிங் முறையில் ஊழியர்களை நியமித்தல் போன்ற பல கட்ட வடிகட்டலுக்கு பின்னர் தமிழக அரசு பெரும்பான்மையான துறைகளை தனியார் வசம் ஒப்படைக்கும் முடிவுக்கு வந்துள்ளது இதன் விளைவுகள் நாம் கற்பனை செய்து கூட பார்க்க முடியாத சமூகப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் அரசு நிறுவனங்களை தனியார் மயமாகும் போக்கின் மூலம் மக்கள் நலன் என்பது கேள்விக்குறியாகிவிடும் என்பது மட்டுமல்ல இளைஞர்களின் எதிர்காலம் நாட்டின் வருங்காலம் போன்றவை கூட தீவிரவாதம் பயங்கரவாதம் போன்ற சாத்தான்கள் கையில் சிக்கிவிடும் பேர்அபாயத்தை ஏற்படுத்தி விடும் என்பதை தமிழக அரசு உணர வேண்டும்.

தமிழ்நாடு அரசு துறைகளில் காலியாக உள்ள 6 லட்சம் பணியிடங்களை நீண்டகால மாக நிரப்ப படாதது லட்சக்கணக்கான இளைஞர்கள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டு வேலைக்காக காத்துக் கிடக்கின்றனர் உதாரணமாக 80 லட்சம் பேர் தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்கிறார்கள் அதுபோல் இந்தியாவில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலைக்காக காத்திருப்போர் எண்ணிக்கை 15 கோடியை தாண்டி விட்டது என்றும் கிராமங்களில் வேலை

கிடைக்காத நபர்களின் எண்ணிக்கை 20 கோடி பேர்களும் என்றும் பல்வேறு நிறுவனங்களின் ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றனர் தமிழக அரசு துறைகளில் ஆறு லட்சம் பணியிடம் காலியாக உள்ள நிலையில் வேலையேற்றுக் கிடக்கும் இளைய தலைமுறைகளுக்கு உடனடியாக அதை வழங்கி வேலை வாய்ப்பின்மை நிலையை அரசு தீர்க்க வேண்டும் இவை தவிர புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தை அரசை ஏற்று நடத்த வேண்டும்.

சமூக நீதிக்காக போராடிய திராவிட அரசாங்கம் தான் இன்று சொந்த நாட்டில் இளைஞர்கள் கையேந்தும் நிலைக்கு ஆளாகியுள்ளனர் இம்மாநிலத்தில் வளர்ந்தோறும் மூன்று லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் தேர்தல் வாக்குறுதி சொன்னது தற்போது காற்றில் கரைந்து காணாமல் போனதுதான் திராவிட மாடல் அரசாங்கத்தின் சாதனையாக உள்ளது.

அரசு ஊழியர் ஆசிரியர்களின் இன்றைய இக்கட்டான நிலைக்கு முக்கிய காரணம் சென்ற தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு மு க ஸ்டாலின் அவர்கள் கொடுத்த நம்பிக்கையிலும் வாக்குறுதிகளும் தான் அவர் அரசு ஊழியர் நடத்திய போராட்டங்களுக்கு வந்து அப்போது ஆளும் கட்சியிடம் அரசு ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற கோரி முதல் குரல் கொடுத்தவர் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் அனைத்து கோரிக்கைகளையும் ஆட்சிக்கு வந்ததும் தீர்த்து வைப்பேன் என்று உறுதிமொழியையும் தந்தார் அவர் சொன்னபடி அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்கள் குடும்பத்தினருடன் வாக்களித்ததோடு மட்டுமல்லாமல் பிரச்சாரங்களும் செய்து திரு மு க ஸ்டாலின் அவர்கள் முதல்வராக அமர முக்கியமாக பங்காற்றினோம் ஆனால் முதல்வராகி 42 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் அவர் தேர்தலிலும் அதற்கு முன்பும் கொடுத்த வாக்குறுதி படி அரசு ஊழியர்களின் கோரிக்கைகளை ஒன்றைக் கூட செயல்படுத்தாமல் இருப்பதோடு அரசாங்கத்தை நேர் எதிர்த்து செயல் இயங்க ஆரம்பித்துள்ளார். அவுட்சோர்சிங் அரசாணைகளை வெளியிட்டு ஒட்டுமொத்த அரசாங்கத்தையும் தனியார் மயமாக்கும்முடிவை எடுத்துள்ளார்.

ஒரு திராவிட மாடல் அரசு முன்னெடுத்துள்ளதை ஊடக விமர்சகர்கள் முதற்கொண்டு கூட்டணி தலைவர்கள் வரை அதிர்ச்சியோடு பார்க்கிறார்கள் இதன் மூலம் ஆட்சியாளர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் அவர்கள் யாருக்கும் யாரும் ஆசிரியர்கள் அரசு ஊழியர் உரிமைகளை சட்டப்படியான உரிமைகளை கொடுப்பதற்கு மன மற்றவர்களாக உள்ளார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது ஆசிரியர்கள் அரசு ஊழியர்கள் மற்றும் அவரது குடும்பத்தினர் என அனைத்து அரசு ஊழியரும் பெறக்கூடிய குடும்பத்துடன் ஓட்டுகளை பெறுவதற்காக எந்த நிலைக்கு இறங்கி வந்து தேர்தல் வாக்குறுதிகளை சொல்வார்கள் என்பது மீண்டும் மீண்டும் உணர்த்தப்பட்டுள்ளது இதுதான் இந்த அரசாங்கத்தின் நிலை என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டு வரும் நிலையில் அரசு ஊழியர்கள் தங்கள் போராட்டங்களை அடுத்த நிலைக்கு கொண்டு செல்ல வேண்டிய நிர்பந்தத்திற்கு ஆளாகி இருக்கிறோம்.

இந்த 40 ஆண்டு காலத்தில் அரசாங்கம் நடவடிக்கைகளும் அதை நம் ஊழியர்கள் எதிர்கொண்டு போராடி வெற்றி பெற்ற விதங்களும் நம்முடைய நாளைய போராட்டங்களுக்கான விதைகள் ஆகும் நமது ஊழியர்கள் மத்தியில் தொய்வையும் சோர்வையும் சலிப்பையும் இந்த அரசாங்கங்கள் ஏற்படுத்துவதன் மூலம் போராட்டங்களை நீர்த்துப்போகச் செய்யலாம் என்ற நம்பிக்கையை நாம் உடைத் தெரிய வேண்டும்.

நம்முடைய போராட்டங்களின் வெற்றி என்பது நம்முடைய ஒற்றுமை மற்றும் உறுதியை சார்ந்தே உள்ளது அந்த ஒற்றுமையும் உறுதிப்பாட்டையும் நாம் எப்போதும் நிலை நிறுத்த வேண்டும் அதிகாரம் பொய்யான வாக்குறுதிகள் அரசாணைகள் அவசர சட்டங்கள் போன்றவற்றின் மூலம் அரசு ஊழியர்களின் ஆசிரியர் தொழிலாளர்கள் போன்றவர்களின் சட்டப்படியான உரிமைகளை பறிக்க நினைக்கும் நிறுவனம் மற்றும் அமைப்புகளிடமிருந்து உரிமைகளை மீட்டு பெறுவதில் சுணக்கமோ நம்பிக்கையின்மையோ ஏற்பட்டு விடாமல் போராட்டத்தை வெற்றிகரமாக மாற்றிட ஒரு முழுமையான கருத்து ஒற்றுமையை இந்த நேரத்தில் நாம் மேற்கொள்ள வேண்டி உள்ளது நம்முடைய போராட்டங்களை காலத்திற்கு

ஏற்ப மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயமும் மாற்று வழி திட்டங்களை செயல்படுத்துவதும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய அவசியமும் அவசரமும் இப்போது எழுந்துள்ளது எவ்வளவு நாள் போராடினாலும் எதுவும் செய்ய முடியாது என்ற முரண்டு பிடிக்கும் அரசாங்கங்கள் நம்முடன் வந்து பேச்சுவார்த்தை நடத்தியே ஆக வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்துவதல்ல நிர்பந்தத்தை நாம் உருவாக்கிட வேண்டும்.

ஒவ்வொரு இயக்கமும் ஒவ்வொரு போராட்டமும் நம்முடைய இருப்பின் நிலை நிறுத்துவது மட்டும் அல்ல அது ஒவ்வொரு அரசு ஊழியரிடமும் உரிமைக்கான கோரிக்கைகளை கொண்டு சேர்ப்பது நாம் அனைவரும் நம்முடைய விதியை மாற்றி எழுதுவதற்கான சக்தியை பெற்றிருக்கிறோம் அந்த சக்தி பெரும் நெருப்பாக குளிர்ந்து விட்டு எறியும் போது நம்முடைய கொந்தளிப்பின் உணர்ச்சியை ஆட்சியாளர்கள் உணர்வார்கள் நாம் எவ்வளவு நெருக்கடியான காலகட்டத்திலும் அரசுக்கு உறுதுணையாக நின்று இருக்கிறோம் என்ற வரலாற்றை அவர்கள் புரிந்து கொள்வார்கள் அதை அவர்களுக்கும் நியாயமான முறையில் புரிய வைக்க முயன்ற நாம் தோற்று விட்டோம் அதனால் தான் அகிம்சைக்கு சற்றும் குறையாத வலிமை மிக்க போராட்டங்களால் புரிய வைப்போம் எனவே போராட்டங்களை சக்தியாக நடத்துவதற்கு பயிற்சிகளை மேற்கொள்வோம். போராட்டக் களத்தில் நாம் நிற்கிறோம் நமக்கோ சக போராளிகளுக்கோ ஏதாவது ஆகிவிட்டால் என்ன ஆவது என்று நினைத்தால் முன்னேற முடியாது சிவில் சமூகத்தை கைப்பற்றும் அரசியல்வாதிகளிடையே அவர்களின் எண்ணம் தங்குதடையின்றி முன்னோக்கி செல்கிறது.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு நம்பிக்கை துரோகங்களை தாங்கிக் கொண்டு முன்னேறும் போர் வீரனைப் போல் நாம் இன்றைய காலகட்டத்துக்கான ஒரு போராட்ட வடிவத்தையும் முழக்கங்களையும் உருவாக்க வேண்டும். அவன் அஜெண்டாவில் அவன் சற்றும் பின்வாங்காத போது சட்டமன்றத் தேர்தல் வரும் சூழ்நிலையில் நாம் அப்புறம் என்று நம்முடைய போராட்டங்களை தள்ளி போட முடியாது இப்போதே தீர்க்கமான உக்கிரமான போராட்டங்களை நாம் துவக்கியாக வேண்டும். எல்லா போராட்டங்களையும் இழப்புகள் சில ஏற்படுவது இயல்புதான் தியாகத்தினால் வாங்கப்பட்ட வெற்றிகள் சலுகைகள் எப்போதும் சிறப்பானவை நாம் ஒன்றை இங்கே நம்முடைய மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும் பிறப்புக்கு பின் இறப்புக்கு முன்னும் இங்கு மாறாதது என்றும் எதுவும் இல்லை நம்முடைய போராட்டத்தில் நம்பிக்கை கொள்ள வேண்டும் நாம் விரும்பக்கூடிய மகிழ்ச்சியை வெற்றியை மற்றவர்களுக்கும் நாம் தேடித் தர வேண்டும் ஒரு வேலை நம்முடைய பொறுமை கிளர்ச்சிக்கு வித்திட்டால் அதற்கு முழு பொறுப்பு நாம் அல்ல இந்த அரசாங்கம் தான் அரசு ஊழியர் வர்க்கம் நிகழ்கால சமூகத்தை தாண்டி ஒரு வருங்கால சமூகத்தை படைக்க கூடிய தொழிலாளி வர்க்கம் என்பதை நம்மை மறுப்போருக்கும் மதிப்பிற்கும் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

மனிதர்கள் தங்களுடைய வரலாற்றை தாமே படைக்கிறார்கள் ஆனால் அவர்கள் விருப்பம் போல் படைப்பதில்லை அவர்களால் தேர்வு செய்யப்படுகிற சூழ்நிலைகளில் அதை படைப்பதில்லை மாறாக நேரடியாக எதிர் கொள்ளப்பட்ட சூழ்நிலைகளின் கீழ் படைக்கிறார்கள் இந்த போராட்டம் நாம் விரும்பி ஏற்ற போராட்டம் அல்ல நம் மீது திணிக்கப்பட்டுள்ள போராட்டம் இந்தப் போராட்டத்தை நம் மீது திணித்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் கோர முகங்களை வெளிக்கொண்டு வரும் அளவுக்கு நம்முடைய போராட்ட உத்திகளும் செயல்திட்டங்களும் இருக்கும் இந்த முடிவை எடுக்க ஆயிரம் முறை நாங்கள் ஆராய்ந்து பார்த்து விட்டோம் அதன்பிறகு அரசுக்கு எதிரான அணி திரள முடிவெடுத்தோம் இதுவரை நடந்த போரில் நாம் அபிமன்யுவாக இருந்து விட்டோம்.

இனி வரும் போராட்ட போர்களில். அர்ஜுனனாக வென்றிடுவதற்கான போராட்ட உத்திகளை காணவே இந்த 15 வது மாநில மாநாடு கூடுகிறோம் நம்முடைய வெற்றி என்பது இறுதிக் குறிக்கோளை அடைதல் ஆகும் நாம் கூடுவது இறுதிக்கட்ட போராட்டத்தை வெல்வதற்கான உறுதிமொழி ஏற்பதற்காக எனவே டிசம்பர் 13 14 2024 இல் தூத்துக்குடியில் நடைபெறும் மாநில மாநாட்டில் கலந்துகொண்டு பேரவை எடுக்கும் போராட்ட அறைகூவலை பேரலைகளாக மாற்றுவோம் கோரிக்கைகளை நீட்டி முழங்குவோம் வாருங்கள் தோழர்களே! ●

# மாநாடு! நமக்கு சொல்லப்போகும் சங்கதி...

**- மு.பாஸ்கரன்**

அரசு ஊழியர் சங்கம் தோன்றுவதற்கு முன் இருந்த அமைப்பில் சில சுயநலங்களும், சில துரோகங்களும், சில தனிப்பட்ட மனிதர்களின் சீழ்பிடித்த சித்தாந்தங்களும், ஆட்சியாளர்களோடு அவர்கள் கொண்டிருந்த சாஷ்டாங்களுமே, அவர்களிடமிருந்து நாம் பிரிந்து வந்து அரசு ஊழியர்சங்கம் எனும் பேரமைப்பை துவக்கிட காரணமாக அமைந்தது. தற்போது ஆட்சியாளர்களும், அரசியல்வாதிகளும், அதிகாரவர்க்கமும் அரசு ஊழியர்களின் உரிமைகளின் மேல் அவ்வளவு எளிதாக கைவைத்துவிட முடியாது என்ற நிலை உருவாகி இருப்பதற்கும் ஊழியர்களுக்கு எது தேவை என்பதை நிர்ணயிக்;கக்கூடிய சக்தியாக வளர்ந்து நிற்கிறது என்றால் அதற்கு காரணம் ஊழியர் நலன் என்ற ஒற்றைத் தத்துவத்திற்காக அது ஓயாமல் பேராடிக் கொண்டிருப்பதால் மட்டுமே சாத்தியம் ஆனது.

அரசு ஊழியர்களின் வரலாற்றை ஆய்வு செய்யும்போது, வரலாறு முழுவதும் நம்மால் ஒன்றை காண முடிகிறது. எந்த ஒரு அரசம் மன்னர் அரசாக இருந்தாலும் சரி, ஜனநாயகப்பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் நல அரசாக இருந்தாலும் சரி, அரசு ஊழியர்களுக்கு எந்த ஒரு உரிமையையும் அவர்களை மனிதர்களாக மதித்து தானாக வழங்கி விடவில்லை என்ற உண்மையை அறிய முடிகிறது. இந்த தேசத்திற்காக, மக்கள் நலனுக்காக அரசு அறிவிக்கும் திட்டங்களை செயல்படுத்தி வரும் அரசு ஊழியர்கள் எல்லா காலகட்டங்களிலும் தங்கள் உரிமைகளுக்காக இடைவிடாத போராட்டங்களை நடத்தியுள்ளார்கள் என்பதையும் அறிய முடிகிறது. ஊழியர்கள் உரிமை கோரி போராடியபோது எல்லா ஆட்சியாளர்களும் ஒரே நிலைபாட்டை மேற்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் காணமுடிகிறது. விடுதலை பெற்ற இந்தியாவில் அரசு ஊழியர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக ஊதிய உயர்வு கோரி போராடியபோது ஆட்சிப் பொறுப்பிலிருந்த முதல்வர்கள் இக்கோரிக்கைகள் குறித்து என்ன கருத்து தெரிவித்தார்கள் என்பதை பார்த்தால் வேதனையாக உள்ளது.

நாடு விடுதலை பெற்ற துவக்கத்தில் தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த குமாரசாமி ராஜா, ‘அரசு ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்க அரசிடம் பணம் இல்லை” என்றார். அதன்பின் வந்த ராஜாஜி ‘நாட்டில் பஞ்சம் எனவே சம்பள வெட்டு தவிர்க்க முடியாதது” என்றார். அடுத்துவந்த காமராஜர், ‘விவசாயிக்கு நாளொன்றுக்கு 12 அணா கூலி மட்டுமே கொடுக்கப்படும் போது உங்களுக்கு ஏன் இவ்வளவு சம்பளம்” என்ற கேள்வியை முன்வைத்தார். அடுத்து வந்த கலைஞர் கருணாநிதி ‘கருணை இருக்கிறது நிதி இல்லை” என்றார். பின்னர் வந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ‘அரசு ஊழியர்களின் போராட்டத்தை மக்கள் பார்த்துக் கொள்வார்கள் என்றார். மறைந்த முதல்வர் செல்வி. ஜெ. ஜெயலலிதா ‘அரசின் வருவாயில் 94 சதவீதம் அரசு ஊழியர் சம்பளத்திற்கே சென்று விடுகிறது. மக்களுக்கு வெறும் 6 சதவீதம்தான் என்று உண்மைக்கு புறம்பான கருத்துக்களைத் தெரிவித்தார். மாநாடு நடைபெறவுள்ள இக்காலகட்டத்தில் முதல்வராக திகழக்கூடிய மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள் சற்று மாறுபட்டு நிச்சயமாக உங்களது கோரிக்கைகளை நான் நிறைவேற்றுவேன் என்று சொன்னாலும் மேலே குறிப்பிடப்பட்ட முதல்வர்களின் பட்டியலில் இடம்பெருகிறார். இவற்றிலிருந்து ஆட்சியாளர்கள் எவராயிருந்தாலும் அரசு ஊழியர்களைப் பொறுத்த வரை ஒரே கருத்தை உடையவர்களாகத்தான் இருக்கிறார்கள் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

இன்று நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற உரிமைகள் அனைத்தும் அரசாங்களோ அதிகாரிகளோ இஷ்டப்பட்டு கொடுத்தவை

அல்ல. அவை ஒவ்வொன்றும் நம் முன்னோடிகளால் கஷ்டப்பட்டு போராடிப் பெற பட்டவை. ஒவ்வொன்றிற்குப் பின்னாலும் அவற்றைப் பெற்றதற்கான போரட்ட வரலாறு உள்ளது. சுதந்திரப் போராட்ட காலத்துடனேயே அரசு ஊழியர் போராட்டங்களும் பின்னிப் பிணைந்துள்ளன. கரடு முரடான பாதைகளைக் கடந்துதான் நம்முடைய முன்னோடிகள் நாம் இன்று அனுபவித்து வரும் பல உரிமைகளைப் பெற்றுத் தந்திருக்கிறார்கள். அவர்கள் பெற்றுத் தந்த உரிமைகளை இப்போது இருக்கும் அரசாங்கங்கள் பறித்துவிடத் துடிக்கின்றன. தராளமயம், தனியார்மயம், உலகமயம், நவீன பொருளாதாரக் கொள்கைகள், சிக்கன நடவடிக்கைகள், போன்ற புதுப்புது பெயர்களில் அரசு ஊழியர்களின் உரிமைகளின் மீது தாக்குதல்கள் தொடுத்து வருகின்றன. நாம் காலம்காலமாக பெற்று வந்த ஓய்வூதியம் இப்போது பங்களிப்பு ஓய்வூதியமாக மாற்றப்பட்டிருக்கிறது. குறைந்தபட்ச அடிப்படை ஊதியம் நிர்ணயிப்பதில் ஊழியர்களின் வாழ்வாதாரங்கள் நசுக்கப்படுகின்றன. மத்திய அரசு ஊழியர்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த படிகளின் மீது கடந்த ஊதிய மாற்றத்தில் வெட்டு விழுந்திருக்கிறது. மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாண ஊதியம் மற்றும் படிகள் வழங்க கோரி 57 ஆண்டுகளாக போராடி வருகிறோம். ஆனால் அது இன்றுவரை முழுமையாக கிட்டவில்லை.

நம்முடைய உரிமைகளை அரசுகள் பறிக்கும் போது வெளியில் வந்து போராட வேண்டிய அவசியங்கள் எழுகின்றன. ஆனால் அலுவலகங்களிலிருந்து அனைத்து ஊழியர்களும் போராட வருவதில்லை, அதற்கு முக்கிய காரணிகளாக, கடுமையாண பணிச்சுமையும், தற்போது ;பெற்றுவரும் சலுகைகள் அரசு தானாக முன்வந்து கொடுத்ததாகவும் நினைக்ககூடிய மனநிலையுமே என்பதை புரிந்துகொள்ள முடிகிறது. போராடி பெற்றவை எனவும் அரசு தானாக தாராது, போராடி பெற வேண்டும் என்ற உணர்வை வளர்க்க வேண்டியது சங்க நிர்வாகிகள் மற்றும் முன்னணி ஊழியர்களின் கடமையாகும். எந்த ஒரு போராட்டமும் நிர்வாகிகளும், முன்னணி ஊழியர்களும் மட்டும் பங்கேற்பதால் மட்டும் வெற்றி பெற்றுவிடாது. போராட்டத்திற்கான அறிவிப்பு பிரசுரங்களை ஊழியர்களிடம் விநியோகித்து விடுவதாலேயே அவர்கள் பேராட்டத்திற்கு வந்து விடுவார்கள் என்று எண்ண முடியாது. போராட்டம் ஏன்? எதற்காக? போன்றவற்றை அவர்கள் உள் வாங்கினால்தான் போராட்டங்கள் தன்னெழுச்சியாக வேகம் பெறும். ஆக சாதாரண ஊழியர்களின் மனதில் உள்ள தவறான எண்ணங்களை தீர்க்க வேண்டியது சங்க நிர்வாகிகள் முன்னணி ஊழியர்களின் முக்கியக் கடமையாகும். கடந்த கால வரலாறுகளை அவர்களுக்கு விளக்கி அவர்களுக்கு ஒரு இன்னல் என்றால் அரசு ஊழியர் சங்கம் முன்னிற்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

அரசு ஊழியர் இயக்கம் நீண்ட வரலாற்றை கொண்ட இய்க்கமாகும். இதன் வரலாற்றை இயக்கத் தோழர்கள்; ஒவ்வொருவரும் அறிந்து வைத்திருப்பதோடு அவற்றை சாதாரண ஊழியர்களிடத்தில் கொண்டு சேர்க்க வேண்டியதும் இப்போது அவசியமாகியுள்ளது. அப்போதுதான் இருக்கின்ற உரிமைகளை காக்க முடியும். இழந்து கொண்டிருக்கின்ற உரிமைகளை மீட்க முடியும். தங்களது துன்பங்களை வெறுமனே சகித்துக்கொண்டு போகாமல் அவற்றை எதிர்த்துப்போராட நமது மக்களுக்குக் கற்றுத்தர வேண்டும். அவர்கள் தங்கள் உழைப்பை நேசிக்கவும், நிமிர்ந்து நிற்கவும் செயலாற்றவும் கற்றுகொள்ள வேண்டிய அவசியம் உள்ளது.

இறுதியாக... ஒரு சிறிய பறவை ஒரு மரத்தில் அமர்ந்து ஒரு அழகான பாடலைப் பாடிக்கொண்டிருந்தது. திடீரென பலத்த காற்று வீசியதால் பறவையின் கூடு அழிந்தது. பறவை ஒன்றும் இல்லாமல் போனது. ஆனால் கைவிடுவதற்குப் பதிலாக, பறவை மீண்டும் பாடத் தொடங்கியது. முன்பை விட இம்முறை பாடல் இன்னும் அழகாக இருந்தது. ஒரு வழிப்போக்கன் பறவையிடம், 'எல்லாவற்றையும் இழந்துவிட்ட உன்னால் எப்படி இவ்வளவு அழகாகப் பாட முடிகிறது?'' பறவை சொன்னது, 'நான் கூடு இருப்பதால் பாடவில்லை, நம்பிக்கை இருப்பதால்'' என்று பதிலளித்தது. அரசு உங்களிடமிருந்து எதை பறித்தாலும்;, உங்களிடமுள்ள நம்பிக்கை ஒருபோதும் இழக்காதீர்கள். ஆம், அரசு ஊழியர்சங்கம் தான் நம்பிக்கை. ●

கட்டுரை

# ஒன்றிணைந்த வலிமையான போராட்டக் களமே இழந்துவிட்ட உரிமைகளை மீட்டெடுக்கும் பேராயுதம்!

- மு. அன்பரசு

**ஒன்றிணைந்த போராட்டங்களின் வலிமை**

முன்பெல்லாம் தொழிற்சங்க உரிமைகளுக்காக தொழிலாளர்களும், விவசாயிகள் உரிமைகளுக்காக விவசாயிகளும், அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் உரிமைகளுக்காக அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தனித்தனியே போராட்டங்கள் நடத்துவார்கள். அதனமூலம் அரசாங்கத்தின் கவனத்தை ஈர்த்து தங்களுக்கான உரிமைகளை, பேசித்தீர்த்துக் கொள்வார்கள். ஆனால் நவீன பொருளாதாரமயம் பரவலாக்கப்பட்ட பின்னர் விவசாயிகள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் என எந்த பிரிவினரும் தங்களுக்கான உரிமை போராட்டங்களை அறிவித்து எத்தனை நாட்கள் போராட்டங்கள் நடத்தினாலும், "நீங்கள் எத்தனை நாட்கள் வேண்டுமானாலும் போராட்டம் நடத்திக் கொள்ளுங்கள் அதைப்பற்றி எங்களுக்கு எவ்வித கவலையும்இல்லை" என்கிற அலட்சியத் தொனி அரசாள்பவர்களிடமும், கார்ப்பரேட் முதலாளிகளிடமும் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

ஸ்டெர்லைட் தொழிலாளர்கள் போராட்டமானாலும், விவசாயிகள் போராட்டமானாலும் அவைகள் எல்லாம் 100 நாட்களுக்கு மேலாக நடைபெறுகின்றன. இது களத்தில் நிற்கும் தொழிலாளர்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தி அவர்கள் போராட்டத்திலிருந்து விலகி ஓட செய்யப்படும் தந்திரமாகும். இது போராட்டம் நடத்துபவர்களுக்கு சிக்கலை ஏற்படுத்துவதோடு, போராட்டத்திற்கு தொழிலாளர்களிடையே ஆதரவு இல்லை என்கிற பிரச்சாரத்தை நடத்தி போராட்டத்தை பலவீனப்படுத்தும் அரசாங்கம் மற்றும் பெருமுதலாளிகளின் நரித்தனம் ஆகும். எந்தப் போராட்டமானாலும் அது முதல் நாளிலேயே முடிந்து விடுவதில்லை. இன்றைய அரசியல் சூழ்நிலையில் எந்தப் போராட்டமானாலும் கடுமையானதாகவும், நீடித்ததாகவும், வலி நிறைந்ததாகவும், பழி வாங்கலைத் தாண்டி முன்னேறுவதாகவுமே இருக்கின்றன. உண்மைக்கும், உரிமைக்கும் போராடும் சங்கங்கள் உறுதிப்பாட்டோடு கடமையாற்றிட வேண்டிய கடப்பாடுகள் நிறைந்த காலமாக உள்ளது இது. இதில் எந்தப்பக்கம் கடைசிவரை தங்கள் நிலைப்பாட்டிலிருந்து விலகாமல் மன உறுதியோடு யார் நிற்கிறார்களோ அவர்களே தங்கள் உரிமைகளை மீட்டெடுக்கிறார்கள். அதனால் இன்றைய காலகட்டத்தில் எந்தப் போராட்டமும் எளிமையானதில்லை என்பது யதார்த்தமாகி யிருக்கிறது.

கலாச்சார உரிமைக்கான, ஜல்லிக்கட்டு போராட்டமாக இருந்தாலும் சரி,, விளை நிலங்களில் விளையும் தானியங்களை கார்ப்பரேட் களவாணிகளிடம் விற்க வைத்து விவசாயிகளை அடிமைக்கூலிகளாக மாற்றிடப் பார்த்த வேளாண் சட்டங்களை எதிர்த்த போராட்டமாக இருந்தாலும் சரி,, ஸ்டெர்லைட் ஆலை போராட்டமாக இருந்தாலும் சரி அவை எதுவும் உடனடியாக முடிவுக்கு வந்துவிடவில்லை. தில்லி போராட்டமும், ஜல்லிக்கட்டு போராட்டமும் முடிவுக்கு வந்ததில் முக்கிய காரணங்களாக ஓட்டு அரசியலும், பதவி அரசியலும் இருந்தன. ஜல்லிக்கட்டு தடையை நீக்காவிட்டால் தமிழ்மக்கள் தண்டித்துவிடுவார்கள் என்பதாலும் வேளாண் சட்டங்களை விலக்கிக் கொள்ளாவிட்டால் ஐந்து மாநிலங்களில் பாஜக தோல்வியை சந்திக்க நேரிடும் என்ற பயத்தினாலேயே அவை விலக்கிக் கொள்ளப்பட்டனவே அன்றி அந்த சட்டங்கள் விவசாயிகள் பொது மக்கள் நலனுக்கு எதிரானவை என்று ஆட்சியாளர்கள் உணர்ந்து கொண்டு விலக்கிக்கொள்ளவில்லை என்பதை

நாம் விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

இதுபோன்ற மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, நாசகரமான கொள்கைகளை தூக்கிப்பிடித்து அரசாங்கங்கள் செயல்படும்போது குறிப்பிட்ட பிரிவினர் நடத்தும் போராட்டங்களை அரசாங்கங்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்கள் அந்த போராட்டங்களை கண்டுகொள்ளாமல் அதை நீர்த்துப்போக விட்டு போராட்டங்களை சுலபமாக மழுங்கடித்து விடுகின்றன. எனவே, எல்லா பிரிவினரின் உரிமைகளுக்காகவும் அரசாங்கங்களையும் பெருமுதலாளிகளையும் எதிர்த்து அனைத்து உழைப்பாள, தொழிலாள மக்களும் ஒன்றிணைந்து போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விடுகிறது.

**அரசு ஊழியர் சங்கத்தின் முன்னெடுப்புகள் :**

அரசு ஊழியர்களுக்காக மட்டுமல்லாமல், விவசாயிகள், தொழிலாளர்கள், பெண்கள் ஆகிய அனைத்து பிரிவினருக்கும் எதிரான அல்லது குறிப்பிட்ட பிரிவினருக்கான மக்கள் விரோத முடிவுகளை அரசாங்கங்கள் எடுக்கும் போது அவற்றை எதிரத்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் எண்ணற்ற போராட்டங்களை நடத்தியிருக்கிறது, ஜாக்டோ ஜியோ என்ற கூட்டமைப்பின் மூலமாக அரசு ஊழியர்கள் ஆசியர்கள் ஒன்று சேர்ந்து அதன்மூலமாகவும் பல போராட்டங்கள் நடத்தி அரசை பணிய வைத்துள்ளோம். தனிக் கொட்டகை போட்டு தன்னை தனிமைப்படுத்திக்கொள்ளாமல் உழைப்பாளர் வர்க்கம் என்ற பொது பிரவாகத்தில் ஒன்றிக் கலந்து மத்திய மாநில அரசுகளின் கொள்கைகளையும் அதன் பின்னால் இருக்கும் முதலாளித்துவ அரசியலையும் எதிர்த்து போராடுகிற அமைப்பாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் இருந்து வருகிறது, தொழிற்சங்கங்கள் நடத்தும் அனைத்து அகில இந்திய வேலை நிறுத்தங்களிலும் கலந்து கொண்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனது பங்களிப்பை தொய்வில்லாமல் செய்துகொண்டு வருகிறது.

**மத்திய அரசின் நாசகர நடவடிக்கைகள் :**

மத்திய அரசு பணமயமாக்கல் திட்டத்தின் மூலம் அரசின் சொத்துக்களை குத்தகைக்கு விடுவது என்ற பெயரால் இந்த நாட்டை முதலாளிகளுக்கு தாரை வார்த்து வருகிறது. விமானம், ரயில்வே, சாலைகள், துறைமுகம், பாதுகாப்பு, மின்சாரம், சுரங்கங்கள் போன்ற அரசுக்கு சொந்தமான அனைத்துச் சொத்துக்களையும் முதலாளிகளின் வேட்டைக் காடாக்க துணிந்திருக்கிறது. இன்று இந்திய மக்களின் ஒற்றுமையை சிதைக்கும் வண்ணம் வகுப்புவாதத்தையும், சாதி அரசியலையும் பயன்படுத்துகிற தேச விரோத சக்திகளின் கூடாரமாக மத்திய அரசு மாறியிருக்கிறது. தொழிலாளர் சட்டங்களைத் திருத்துவது, விவசாய சட்டங்களை திணிப்பது, காஷ்மீர் மாநிலத்தை துண்டு துண்டாக்கி யூனியன் பிரதேசம் ஆக்குவது, அடக்குமுறைச் சட்டங்கள் மூலம் மாற்றுக் கருத்துக்களை ஒடுக்குவது, பல நூற்றுக்கணக்கான அறிஞர்கள், சிந்தனையாளர்கள், பத்திரிகையாளர்கள், சமூக செயல்பாட்டாளர்களை விசாரணை ஏதுமின்றி சிறைகளில் அடைப்பது, நாடாளுமன்றத்தை கேலிக்கூத்தாக்குவது, நீதிமன்றங்கள், சி.பி.ஐ., தேர்தல் ஆணையம், தணிக்கைப் பிரிவு, ரிசர்வ் வங்கி போன்ற சுயேச்சையான அமைப்புகள் அனைத்தையும் கைப்பாவையாக்குவது என்ற பாசிசத் தன்மை கொண்ட நாசகார நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து செய்து வருகிறது.

நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரம், ஜனநாயக அமைப்புமுறை ஆகியவற்றை சிதைக்கும் வகையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் கார்ப்பரேட்டுகளின் உதவியுடன் ஒட்டுமொத்த சமூகத்தையே பேரழிவுக்கு ஏற்படுத்தக்கூடிய விதத்தில் ஆட்சியில் உள்ள ஏதேச்சதிகார சக்திகள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைளுக்கு எதிராக அனைத்து தரப்பினரும் திரள வேண்டிய கட்டாயம் எழுந்துள்ளது. தொழிலாளர்கள், விவசாயிகள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தங்களின் ஒன்றுபட்ட நடவடிக்கைகள் மூலமாக மக்களின் வாழ்வு மற்றும் வாழ்வாதாரங்களைப் பறித்திடும் மத்திய அரசின் கொள்கைகளை முறியடித்திட ஒன்றுகூடி போராடவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

**நமக்கான உரிமைகளும், நிலுவைகளும் :**

வேலை செய்வதற்கான உரிமை, வாழ்க்கை ஊதியம் பெறுவதற்கான உரிமை, தரமான சுகாதாரப் பாதுகாப்பு, கல்வியை இலவசமாக அளித்தல் மற்றும் நியாயமான அரசமைப்பு சட்ட உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாத்திட அனைவரிடமும் நாம் ஆதரவு கேட்க வேண்டும். இழந்த உரிமைகளை மீட்கவும் இருக்கும் உரிமைகளில் கைவைக்காத வண்ணமும் அரசியல் கட்சிகள் தேர்தல் நேரங்களில் தங்கள் தேர்தல் அறிக்கையில் அரசு ஊழியர்கள் சார்ந்த உறுதிமொழி அளித்திட அழுத்தம் கொடுக்க வேண்டும். தாங்கள் ஆட்சிக்கு வந்தால் தொழிலாளர்கள் விவசாயிகள் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் என அனைத்துத் தரப்பு மக்களின் உரிமைகளையும் காப்போம் என்ற உறுதிமொழியை அவர்களிடமிருந்து பெற்றிட வேண்டும்.

பழைய ஓய்வூதியத் திட்டத்தை மீண்டும் அமல் படுத்துதல், புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுதல், ஊழியர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழான குறைந்தபட்ச ஓய்வூதியத்தில் கணிசமான குறைந்தபட்ச ஓய்வூதியம் அளித்திட வலியுறுத்துதல், அகவிலைப்படி, சரண்விடுப்பு, வருங்கால வைப்புநிதி வட்டிக் குறைப்பு உள்ளிட்ட கொரோனா தொற்றுக் காலத்தில் பறிக்கப்பட்ட சலுகைகளை உடனடியாக வழங்கிட நடவடிக்கை எடுத்திடக் கோருதல், மத்திய மாநில அரசுத்துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களை நிரப்பிடுதல், அரசுத் துறைகளில் ஒப்பந்தம், தினக்கூலி, அவுட்சோர்சிங் முறைகளை கைவிட்டு அந்தப் பணியாளர்களுக்கும் சிறப்பு காலமுறை ஊதியம் பெறுபவர்களுக்கும் வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வலியுறுத்துதல், இராணுவம், இரயில்வே, ஆயுள் காப்பீடு, வங்கி, பிஎஸ்என்எல் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவதை கைவிடக் கோருதல், மத்திய அரசு தன் ஊழியர்களுக்கு வழங்கியது போல தமிழக அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு 21 மாத ஊதியமாற்ற நிலுவைத் தொகை வழங்கிடுதல், அனைத்து தொழிலாளர் விரோத, விவசாயிகள் விரோத சட்டங்களையும் நடவடிக்கைகளையும் திரும்பப் பெறுதல்.

அதேபோன்று அத்தியாவசிய பாதுகாப்புப் பணிகள் சட்டத்தையும் ரத்து செய்தல், புதிய கல்விக் கொள்கையை கைவிடுதல், சம வேலைக்கு சம ஊதியம் வழங்கிடுவதை உறுதிப்படுத்துதல், வருமான வரி செலுத்தாத அனைத்துக் குடும்பத்தினருக்கும் மாதந்தோறும் ரூ.7500/-ஐ உணவு மற்றும் வருமான ஈடாக வழங்கிடுதல், பெட்ரோலியப் பொருட்களின் மீதான கலால் வரியை கணிசமாகக் குறைத்திடுதல், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்திட உருப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல், முறைசாரா தொழிலாளர்கள் அனைவருக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை அறிவித்திட கோருதல், அங்கன்வாடி 'ஆஷா' ஊழியர்கள், சத்துணவு ஊழியர்கள், இதர சிறப்புக் காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம் மற்றும் தினக்கூலி பெறுபவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்துடன் வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கிட வகை செய்தல், மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு உத்தரவாதச் சட்டத்தின் கீழ் ஒதுக்கீட்டை அதிகப்படுத்தி அதனை நகர்ப்புறங்களுக்கும் விரிவாக்கிடுதல் போன்ற சமூக நலத் திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்திட அரசு ஊழியர் சங்கம் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறது.

இது இனி வரும் காலங்களில் அனைத்து தொழிற்சங்கங்கள் ஆசிரியர் அமைப்புகள், விவசாய அமைப்புகள் ஆகியவற்றுடன் இணைந்து ஒருமித்த போராட்டங்களை வடிவமைக்க வேண்டும்.

**உழைக்கும் வர்க்கமும் சுரண்டும் அரசாங்கமும் :**

இன்று அரசு அலுவலகங்களில் வேலை செய்யும் அரசு ஊழியர்களும், ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களும், கல்விச்சாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களும் வேறு வேறு வகையினராகத் தெரிந்தாலும் அடிப்படையில் இவர்கள் அனைவரும் உழைக்கும் வர்க்கம் என்ற ஒரு அச்சில் வார்க்கப்பட்டவர்கள் என்பதும், தாங்கள் செய்யும் பணிகளில் இவர்கள் வேறுபடுத்தப்பட்டாலும், இவர்களுக்கான உரிமைகளும் கொள்கைகளும் தொழிற்சங்க சித்தாந்தத்தின் அடிப்படையிலானவை என்பதையும் இன்றுள்ள ஒவ்வொரு

உழைப்பாளரும், தொழிலாளியும், அரசு ஊழியரும், ஆசிரியரும் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆளும் அரசாங்கங்கள் இத்தகைய உழைக்கும் மக்களை ஒன்றுசேர விடாமல் வேறுபடுத்தி வைத்திருந்தால் மட்டுமே உழைக்கும் மக்களின் உழைப்பை சுரண்டி எடுக்க முடியும் என்ற ஒற்றைக் கோட்பாட்டின் கீழ் அதீத கவனம்செலுத்தி வருகின்றன. இந்த பிரித்தாளும் சூழ்ச்சி இப்போதல்ல ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஆக்கிரமித்த காலத்திலிருந்தே கடைபிடிக்கப்பட்டு வந்துள்ளது. இந்தியாவில் தொழிற்சங்க அமைப்புகளும், இயக்கங்களும் தோன்றிய வரலாறு அவ்வளவு ஒன்றும் சாதாரணமாக நிகழ்ந்து விடவில்லை. அதன் இரத்தம் தோய்ந்த சுவடுகளில் உள்ள ஈரத்தன்மை பெருமுதலாளிகளும் அவர்களுக்குத் துணைபோகும் அரசாங்கங்களும் உழைப்பாள தொழிலாள மக்கள் மீது, அவர்தம் உரிமைகள் மீது தொடுக்கும் கணைகளே என்பதும் அனைத்து உழைப்பாள தொழிலாள மக்களின் வாழ்வுரிமைப் போராட்டம் இன்னும் முடியவில்லை என்பதையே கட்டியங் கூறுகின்றன. ஆக, இன்று நாம் கார்ப்பரேட்டுகள், கவர்மெண்டுகள், போன்றவற்றுடன் வலிமையான எதிர்போராட்டம் நிகழ்த்த நமது இயக்கத்திலுள்ள ஒவ்வொரு ஊழியருக்கும், உறுப்பினருக்கும் போராடிப்பெற்ற உரிமைகளையும், அவற்றை நாம் இப்போது மெல்ல மெல்ல இழந்து வரும் நிலைகளையும், அவற்றை காப்பாற்ற நாம் மேற்கொள்ள வேண்டிய போராட்டங்களின் அவசியத்தையும் உணர வைக்க வேண்டும்.

அமெரிக்கா, கனடா, சிங்கப்பூர் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அரசாங்கமே தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு பேரிடர் காலங்களில் அவர்களின் ஊதியத்தில் 50 முதல் 75 சதவீதம் வரை அந்தந்த அரசாங்கங்கள் நிதி வழங்கிவரும் நிலையில் இந்தியா போன்ற வளரும் நாட்டில் அத்தகைய நிதியை வழங்காவிட்டால் கூட பரவாயில்லை, மத்திய மாநில அரசுகள் குறைந்தபட்சம் அரசு ஊழியர்களின் சம்பளத்தில் வெட்டுக்களை ஏற்படுத்தாமல் இருந்தாலே போதுமானது. ஆனால் இன்று நடப்பது என்ன? தமிழ்நாட்டின் முதல்வர் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு தேர்தல் காலத்தில் கொடுத்த உறுதிமொழிகளை தன்னுடைய ஆட்சிகாலத்தின் பெரும்பகுதி நிறைவடைந்துள்ள நிலையில் இன்னும் ஒரு உறுதிமொழியைக்கூட நிறைவேற்றாததோடு பழைய ஓய்வூதியத் திட்டத்தை குழிதோண்டி புதைத்து விட்டதை ஓய்வூதியத் துறையை கணக்கு கருவூலத்துறையுடன் இணைத்ததன் மூலம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் வாழ்வாதாரத்தையும் எதிர்காலத்தையும் கேள்விக்குறியாக்கியுள்ளார் தமிழக முதல்வர்.

**தரம் தாழ்ந்த அரசியலின் தாயகம் :**

தொழிலதிபர்களுக்கு கருணை, கடன் தள்ளுபடி, வரிச்சலுகைகளை அறிவித்துவிட்டு, தொழிலாளர்கள், விவசாயிகள், அன்றாடங்காய்ச்சிகளுக்கு எதிர்க்கட்சிகள் கோரிய நிவாரணத்தொகையில் பகுதி அளவேனும் கொடுத்திட மனமில்லாமல், வேலை நேரம் அதிகரிப்பு, ரேஷன் குறைப்பு, வேலையிழப்பு போன்ற நடவடிக்கைகளை முடுக்கிவிட்டு, அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் ஊதியத்திலிருந்து அகவிலைப்படி, சரண் விடுப்பு ஒப்படைப்பு, ஜிபிஎப் வட்டிக் குறைப்பு போன்றவற்றின் மூலம் தாக்குதல் தொடுத்திருக்கும் மத்திய மாநில அரசுகளின் நடவடிக்கைகளிலிருந்து இன்று ஒவ்வொரு இந்தியக் குடிமகனும் விளங்கி கொண்டிருப்பது.

இந்த அரசு மக்களுக்கான அரசு அல்ல கார்ப்பரேட்டுகளின் விசுவாசி என்பதைத்தான். விவசாய, தொழிலாள, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீதான சுமைகளை குறைத்து அவர்கள் வாழ்வாதாரத்தை இயல்பானதாக மாற்ற பெரும் முதலாளிகள் மீது வரி, பன்னாட்டு நிறுவனங்கள் மீது சர்சார்ஜ், நடுத்தர ஊழியர்களை பாதிக்காத அளவிலான வருமான வரம்போடு 40 சதவீத வருமான வரி அறிமுகம் போன்ற அரசுக் கருவூலத்திற்கு நிதியாதாரத்தை ஏற்படுத்துவது எப்படி என ஆலோசனை கூறிய ஐ.ஆர்.எஸ்.அதிகாரிகள் மீது, அவர்கள் கார்ப்பரேட் கம்பெனிகள் மீது

செல்வவரி விதிக்க வேண்டும் என்று கூறிய காரணத்திற்காக அவர்கள் மீது பழிவாங்கும் துறைவாரி நடவடிக்கையை ஏவிவிட்டுள்ள மோடி அரசாங்கம் இழிவினும் இழிவான தரம் தாழ்ந்த அரசியலின் தாயகம் என்பதில் சந்தேகமில்லை.

**ஒன்றிணைந்த போராட்டங்கள் மட்டுமே வென்றுகாட்டும்:**

ஆகவே, ஒரு பெரிய கொள்ளைக் கூட்டத்தை ஓட விரட்டும் செயலில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் பங்கு மகத்தானதாக உள்ளது. அவர்கள் தங்களுடன் தொழிற்சங்க அமைப்புகள், உழைக்கும் வர்க்கத்தின் உறுப்பினர்கள், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் உள்ளிட்ட உரிமைகள் மறுக்கப்படும் அனைத்து தரப்பினரும் ஒன்று சேர்வது என்பது காலத்தின் கட்டாயமாகியுள்ள நிலையில் அதற்கான முன்னேற்பாடுகளை நாம் விரைந்து மேற்கொண்டு நமக்கான உரிமைகளுக்காக மட்டுமல்லாமல், ஏழை எளிய அடித்தட்டு மக்கள் இந்த சமுதாயத்தில் மேலோங்கி வரவும், தங்கள் முன் உள்ள சவால்களை உறுதியுடன் எதிர்கொள்ள ஆயத்தமாக வேண்டும். அதை உறுதிப்படுத்தி உரிமைகளை திரும்பப்பெறும் தீர்மானங்களை இயற்றி புயல்வேக செயல்திட்டங்களை அறிவித்திடும் மாநாடாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 15ஆம் மாநில மாநாடு விளங்கும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை.

கடந்த காலங்களில் கட்டமைப்பு மிக்க இயக்கத்தின் ஊழியர்களால் மட்டுமே உரிமைகளை வெல்ல முடிந்தது. அவர்கள் தான் வாழ்க்கையில் ஓரளவு முன்னேறினார்கள் போராடாத இயக்கங்கள் முன்னேறாமல் பின்தங்கியே இருந்தன, இருக்கின்றன. அரசு ஊழியர்கள் தங்களுடைய உரிமைகளை மீட்கவும் காக்கவும் போராட்டம் என்ற பேராயுதத்தை ஏந்துவதைத் தவிர வேறு ஆயுதம் ஏதுமில்லை. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 15ஆம் மாநில மாநாடு எல்லா தொழிலாள, ஊழிய, விவசாய வர்க்கங்களும் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தையும். ஒன்றிணைந்த போராட்டங்களின் வலிமையையும் பறைசாற்றுவதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அனைத்து தரப்பு தோழர்களையும் ஒன்றிணைத்து, உரிமைகளை தரமறுக்கும் அரசாங்கத்தை எதிர்த்து நிற்கும் வலிமையான போராட்டக் களத்தை ஏற்படுத்தவல்ல தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் இந்த 15ஆம் மாநில மாநாடு வெற்றிபெற புரட்சிகர வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன். ●

# வாசகர் கடிதம்

**– கா.பால் பாண்டி**

பாதிக்கப்படும் பொதுமக்கள்

விலைவாசி உயர்வை ஈடுசெய்கிறதா அகவிலைப்படி உயர்வு?

இந்திய உணவு சந்தையில் தொடர்ந்து விண்ணை முட்டும் விலைவாசி உயர்வால் மிகவும் பாதிக்கப்படுவது பொதுமக்களே(இதில் நடுத்தர வர்க்கம் அரசு ஊழியர் ஆசிரியர்கள் அடங்கும்). கட்டுரையில் எவ்வாறு மக்கள், அரசு ஊழியர் ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்படுகிறார்கள் என்பதை காட்டுகிறது. தரவுகள் அனைத்தும் பயனுடையது.

ஒற்றை புள்ளியை நோக்கி நகர்கிறதா நிர்வாகம்.

அரசு ஊழியர், பொது மக்களை மிகவும் பாதிக்கும் அரசின் செயல்பாடுகளை/ சமூக நீதியை அளிக்கும் செயல்பாடுகளையும் மிகவும் தெளிவாக கட்டுரை எடுத்து காட்டுகிறது. நிச்சயமாக வருங்காலத்தில் அரசு பணியிடங்களை ஒழிக்கும் பணியில் இந்த அரசு பயணித்து வரும் அபாயம் உள்ளது. இளைஞர்கள் படித்து விட்டு வேலை வாய்ப்பு இல்லாத சூழ்நிலையில் வேலைவாய்ப்பு பெருக்க வேண்டிய அரசு இருக்கும் பணியிடங்களையும் ஒழிக்கும் நிலையில் உள்ளது. கட்டுரையில் உள்ள செய்திகளை ஊடகங்கள் விவாதிக்க வேண்டும். ( ஆனால் ஊடகங்கள் அதை விடுத்து கஸ்தூரி பேசியது, அமரன் படம் குறித்து அலசி ஆராய்ந்து கொண்டு விவாதத்தில் மிகுந்த அக்கறையுடன் உள்ளது வேதனைக்குரியது). ●

கட்டுரை

# நமது போராட்டங்களே நம்மை பாதுகாக்கும்

**- ம.அந்தோணிசாமி**

1857 இல் முதல் சுதந்திரப் போர் நடைபெற்றது. அதனை பிரிட்டிஷ் அரசு சிப்பாய்கள் கலகம் என்று வரலாற்றில் பதிவு செய்தது. அதன் பிறகு கிழக்கிந்திய கம்பெனியின் நிர்வாகத்திலிருந்து பிரிட்டிஷ் மகாராணியின் நிர்வாக தலைமைக்கு கொண்டு செல்லப்பட்டு மன்னரின் நேரடி ஆளுமையில் இந்திய நிலப்பரப்பு வைஸ்ராய் தலைமையில் ஆட்சி நடைபெற்றது. அன்று முதல் மத்திய அரசு ஊழியர்கள் மாகாண அரசு ஊழியர்கள் என்று பிரிக்கப்பட்டு ஊதியத்தில் முரண்பாடும் ஏற்றத்தாழ்வும் ஏற்படுத்தப்பட்டது சம வேலைக்கு சம ஊதியம் என்ற கோட்பாடு முறியடிக்கப்பட்டு உழைப்பு சுரண்டல் அரங்கேறியது.

முதல் ஊதியக்குழு 01.01.1947 முதல் நடைமுறைக்கு வந்தது இந்த ஊதிய ஒடுக்குமுறைக்கு எதிராக கொதித்து எழுந்த அரசு ஊழியர்கள் NGOசங்க ஜெகதீசகர் தலைமையில் 15.12.1947 முதல் வேலை நிறுத்தத்தை தொடங்கினார்கள். அன்றைய காங்கிரஸ் அரசு வேலை நிறுத்தத்தை ஒடுக்க நடவடிக்கை எடுத்தது. தலைவர்கள் சிறை வைக்கப்பட்டனர். சென்னை மாகாண கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக குரல் எழுப்பினர். AITUC வேலைநிறுத்தத்தை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றியது. அந்தப் போராட்டம் ஏழு நாட்கள் நடைபெற்றது வேலை நிறுத்தம் தோற்கடிக்கப்பட்டது. ஆனால் ஊழியர்கள் உணர்வு கனலாகவே இருந்து வந்தது .அடுத்தடுத்து வந்த சங்க தலைமை அரசுக்கு ஆதரவாக இருந்த நிலையில், 1975முதல் நடவடிக்கைகுழு செயல்பட்டுவந்தது. அக்குழுவே 1984 இல் என்.ஜி.ஓ சங்கத்திலிருந்து பிரிந்த, தலைவர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தை 06.05.1984 இல் தோற்றுவித்தனர். 1947 அன்று சம வேலைக்கு சம ஊதியம் என்ற கோட்பாட்டை மீண்டும் உயர்த்தி பிடித்து மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் கேட்டு 10.02.1988 இல் ஒருநாள் வேலை நிறுத்தம் நமது அமைப்பு நடத்தியது. போராட்டம் சிறப்பாக நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து ஜாக்டீ அமைப்பை பலப்படுத்தி 1988 ஜுன் 22 முதல் காலவரையற்ற போராட்டம் நடைபெற்றது இந்த போராட்டம் மத்திய அரசுக்கு இணையான ஊதியம் பெற்றிட வழி வகுத்தது 1989இல் ஆட்சியில்அமர்ந்த திமுக அரசு ஊதிய குழுவை நடைமுறைப்படுத்தியது. 40 ஆண்டு கால போராட்டம் ஊழியரின் உரிமையை பாதுகாப்பு உணர்வோடு ஒன்றுபட்ட ஒற்றுமையை கட்டி எழுப்பியதால் இது சாத்தியமானது.

இதனால் போனஸ் பெற்றோம். 1990 இல் இந்திய அரசு தனியார்மயக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த தொடங்கியது. அதற்கு எதிராக நாம் களம் காண வேண்டிய கட்டாயத்திற்குள் தள்ளப்பட்டோம். அன்று முதல் இன்று வரை பல இயக்கங்கள் 1991 முதல் துறைகளை பாதுகாக்க பல கட்ட போராட்டங்களை தொழிற்சங்கங்களை பலப்படுத்திட ஓயாது உழைத்த TNGEA தலைவர்கள் 98ல் அடுத்த ஊதிய குழுவிற்கான போராட்டத்தை வழிகாட்டி நடத்தினர். அதன்மூலம் 40 சத ஊதிய உயர்வு பெற்றோம் 2002இல் மாநில அரசு நாம் அனுபவித்த உரிமைகளை பறித்த போது போராடினோம். 2003இல் ஜாக்டோ ஜியோ மூலம் கடுமையான அடக்கு முறையுடன் வேலை நிறுத்தம் நடைபெற்றது 4 7 2003இல் அரசு அலுவலகங்களை மூடிய நிலையில் 1.76 லட்சம் ஊழியர்கள் டிஸ்மிஸ் ஆனார்கள் 2004 இல் தேர்தலில் பாராளுமன்றத்தில் அதிமுக பிரதிநிதிகள் இல்லை என்ற நிலையை உருவாக்க களத்தில் நின்று பிரச்சாரம் செய்தோம். அதனை தொடர்ந்து நடந்த போராட்டம் காரணமாக 50% பணியினை ஊதியத்துடன் இணைக்கப்பட்டது. 2006 இல் ஊதிய மாற்றம் பெற்றோம் தொடர்ந்து போராட்டம் 2016இல் ஊதிய மாற்றம் கோரி TNGEA போராடியது. 2017-இல் ஜாக்டோ ஜியோ போராட்டம் இறுதி வெற்றியான ஊதிய மாற்றம் பெறும் வரை போராடினோம். நீதிமன்றம் போராடும் ஊழியர்களின் உணர்வை புரிந்து கொண்டு தானே அதனை ஆணை வெளியிட வேண்டி வரும் என அரசை எச்சரித்தது. அரசு எட்டாவது ஊதிய மாற்றத்தை அமல்படுத்தியது அன்று முதல் இன்று வரை பென்ஷன் பெற்றிட தொடர்ந்து போராடி வருகின்றோம். போராடி வருகின்றோம் நிச்சயம் வெற்றி பெறுவோம் தேவை ஒன்றுபட்ட ஒற்றுமை. அதனை 15-ம் மாநில மாநாடு நிறைவேற்றி தரும் நமது மாநாட்டின் தீர்மானங்கள் இந்திய நாட்டில் பென்சனை பாதுகாக்க அரசு பணியை பாதுகாக்க இளைஞர்களுக்கு அரசு பணியை பெற்று வழங்கிட வழிகாட்டும். அந்த திசைவழியில் நாம் அனைவரும் பயணிப்போம். வெல்லட்டும்! வெல்லட்டும்! 15 ஆம் மாநில மாநாடு, வெல்லட்டும்! ●

கட்டுரை

# அரசு மருத்துவர்கள் அலட்சியமாக இருப்பதாக ஏன் தோன்றுகிறது?

- ராஜ சங்கீதன்

மருத்துவர் கத்தியால் குத்தப்பட்ட சம்பவம் பல பக்கங்களை கொண்ட ஒரு பிரச்சினையின் விளைவு! கத்தியால் குத்திய இளைஞரின் தாய்க்கு Hodgkin Lymphoma புற்றுநோய் என சொல்லப்படுகிறது. நோய்களுக்கு எதிராக செயல்படும் ரத்தத்தின் வெள்ளை அணுக்களை பாதிக்கும் புற்றுநோய் இது. வழக்கமாக ஒரு நோய்க்கு அது தொடர்பான மருத்துவத்தை ஒரு மருத்துவரிடம் பார்க்க வேண்டும். குறிப்பாக நீரிழிவு, ரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கும் புற்றுநோய் போன்றவற்றுக்கும் ஒரு மருத்துவரின் அல்லது மருத்துவத்தின் கவனிப்புக்குள் இருக்க வேண்டும்.

காய்ச்சல், சளி போன்ற சிக்கல்களை போல் இந்த நோய்களை கையாள முடியாது. தும்மலுக்கு ஒரு மாத்திரை போட்டதும் சரியாகி விட, உடனே நம் வேலைக்கு சென்று விடுவோம். அது இங்கு நடக்காது. லேசாக தேறினாலும் முழுமையாக சரியாகி விட்டதாக மருத்துவத்தை கைவிடுவதோ அல்லது மிக மெதுவாக குணமாவதால் வேறு மருத்துவரை நாடுவதோ நடக்கக் கூடாது. மீறி நடந்தால், அது மொத்த மருத்துவ செயல்முறையையும் மீண்டும் தொடங்க வைக்கும் என்பதோடு பாதகமான விளைவுகளை கூட ஏற்படுத்தக் கூடும். சம்பந்தப்பட்ட இளைஞரின் தாய்க்கு பல இடங்களில் மருத்துவம் முயற்சிக்கப்பட்டிருக்கிறது. பல இடங்களில் இருக்கும் மருத்துவர்கள், ஏற்கனவே பார்க்கப்பட்ட மருத்துவத்தை தொடரும் கட்டாயம் இல்லாதவர்கள். குறிப்பாக அவர்கள் தனியார் மருத்துவர்களாக இருக்கும் பட்சத்தில், அவர்கள் வேலை பார்க்கும் மருத்துவமனைகளுக்கு ஏற்ப கட்டணத்தை வசூல் பண்ண வேண்டிய அவசியமும் அவர்களுக்கு இருக்கும். அதற்குள் Target, Sales Pitch போன்றவையும் இடம்பெறும். நிச்சயமாக கடந்த மருத்துவத்தின் மீதான விமர்சனமும் அதில் அடங்கியிருக்கும். உயிர் பயம் கொண்டிருப்பவர்களின் மனதில் இத்தகைய விமர்சனங்கள், அம்மருத்துவம் அல்லது அம்மருத்துவர் மீதான அவநம்பிக்கையையும் கோபத்தையும் விளைவிப்பது இயல்பு. ஆனால் அவர்களேனும் குணப்படுத்தி விடுகிறார்களா என பார்த்தால் இறுதி வரை பணத்தை நோக்கிய வேட்டைதான் பிரதானமாக இருக்கும்.

மறுபக்கத்தில் அரசு மருத்துவமனைகளில் அன்றாடம் வரும் நோயாளிகளின் எண்ணிக்கை லட்சக்கணக்கில் இருக்கும். அவர்களை கையாளும் மருத்துவர்களின் எண்ணிக்கை அதற்கு ஒப்பான அளவில் நிச்சயமாக இருக்காது. இந்தியாவிலேயே 1000 நோயாளிகளிக்கான மருத்துவர்களின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் அதிகம்தான் என்றாலும் அதுவே முழுத் தீர்வு கிடையாது என்பதும் உண்மைதான்.

லட்சக்கணக்கானவர்களை பார்க்கும் மருத்துவர்கள் ஒவ்வொருவரும் ஒருநாளில் எத்தனை நோயாளிகளை பார்க்க வேண்டியிருக்கும் என யோசித்துப் பாருங்கள். கடைநிலை அல்லது பயிற்சி மருத்துவர் கூட மிகக் குறைந்தபட்சமாக ஆயிரம் பேரை பார்க்க வேண்டியிருக்கும். அந்த ஆயிரம் பேரின் நோயையும் அவதானித்து, அவர்களுக்கு புரியும் வகையில் விளக்கி, மருந்துகளை அளித்து, சிகிச்சை கொடுத்து, அடுத்தக் கட்ட மருத்துவத்தை பரிந்துரைத்து எனப் பல பணிகள் செய்ய வேண்டியிருக்கும். இவை எல்லாவற்றையும் கடைநிலை மருத்துவரை மட்டும் வைத்து சொல்கிறேன். அவருக்கு மேலே உள்ள அடுத்தடுத்தக் கட்ட மருத்துவர்களுக்கு இன்னும் அதிக பணிகள் இருக்கும். இருதயத்துறையின் தலைமை

மருத்துவருக்காக காத்திருந்து ஒரு முறை என் அம்மாவுக்காக பார்த்தோம். அவர் எங்களிடம் பேசுகிறார், அடுத்தவர்களின் மருந்துச் சீட்டை பார்க்கிறார், பிறகு உள்ளே சென்று அங்கு இருப்பவர்களின் ECG பரிசோதிக்கிறார், மீண்டும் வெளியே வந்து பயிற்சி மருத்துவர்களுக்கு தகவல்களை கொடுக்கிறார், பிறகு எங்களிடம் வந்து நிலவரத்தை சொல்கிறார். பிறகு மருந்துச் சீட்டு பார்த்தவர்களிடம் உடல் சிக்கலை கேட்டறிகிறார். பிறகு அடுத்தவர்களின் ECG பரிசோதிக்க உள்ளே செல்கிறார்.

இவை யாவும் பதினைந்து நிமிடங்களுக்குள் அந்த தலைமை மருத்துவர் செய்தவை. தலைமை மருத்துவர் வேண்டி விரும்பி செய்யும் வேலை இது. அடுத்தடுத்தக் கட்டங்களில் இருக்கும் மருத்துவர்கள் அதே பதினைந்து நிமிடத்தில் 50, 100, 1000 என்ற எண்ணிக்கையில் நோயாளிகளை பார்க்கின்றனர். இவர்களை தவிர வெளியே வேலை பார்க்கும் ஊழியர்களின் நிலை இன்னும் கொடுமை. வரிசையில் மக்களை வர வைக்க வேண்டும். மக்களின் கோபத்தை கையாள வேண்டும். சிபாரிசுகளுடன் வருபவர்களை கையாள வேண்டும்.

அரசு மருத்துவமனைகளுக்கு வரும் மக்களிடம் ஒரு விநோத பாணி உண்டு. பலரும் மருத்துவர்கள் மீது மதிப்பு கொண்டிருந்தாலும் கூட, பெரும்பாலானோர் அரசு மருத்துவர்கள் ஒழுங்காக வேலை செய்வதில்லை என்கிற கருத்தைக் கொண்டிருக்கின்றனர். தனியார் மருத்துவர்களிடம் அவர்களுக்கு இத்தகைய புகார்கள் இருப்பதில்லை. அரசு மருத்துவர்களிடம்தான் இந்த கோபத்தை கொள்கிறார்கள். இத்தகைய சிந்தனை, திட்டமிட்டு அரசின் பொதுத்துறைக்கு எதிராக உருவாக்கப்பட்டது என்பதை அவர்கள் அறிந்திருக்க நியாயமில்லை. எனினும் அரசு மருத்துவத்தின் மீது இருக்கும் அவர்களின் அவநம்பிக்கையே அவர்களின் துயர விளைவாக மாறுவதையும் அவர்கள் உணராதிருப்பதுதான் துயரம். குறிப்பாக இன்றைய தொழில்நுட்ப காலத்தில் தலைவலி தொடங்கி, புற்றுநோய் வரை நாம் கூகுளில் தேடி விடுகிறோம். அவை கொடுக்கும் தகவல்களிலிருந்தும் மருத்துவர்களிடம் கேள்வி கேட்கிறோம். அவற்றை சார்ந்து யூ ட்யூப் மருத்துவர்களை தேடியும் செல்கிறோம். மேலும் உடனடி உணவு, உடனடி போக்குவரத்து போல உடனடி குணமாகுதலையும் எதிர்பார்க்கிறோம். உடனடியாக உடல் குணமாகவில்லை எனில், மருத்துவர் தவறு என எண்ணி இன்னொரு மருத்துவரிடம் செல்கிறோம். கைது செய்யப்பட்டிருக்கும் இளைஞரின் தாய்க்கு சுமாராக ஆறு இடங்களில் மருத்துவம் ஒரு வருடத்திற்குள் பார்த்திருக்கின்றனர். வெவ்வேறு உடல்நிலை, தகவல்கள், மருந்துகள் ஆகியவற்றுடனான உயிருக்கான மன்றாட்டம் கோபத்தை மூட்டி, அதற்கான வடிகாலை ஒரு அரசு மருத்துவரிடம் தணித்துக் கொள்ள வைத்திருக்கிறது. ஊடகங்களும் எதிர்கட்சிகளும் தங்களின் வணிக மற்றும் அரசியல் நோக்கங்களுக்கு இதை திசைதிருப்பி ஊதிப் பெருக்கிக் கொண்டிருக்கின்றன.

உண்மையில் நாம் அனைவரும் கவலைப்பட வேண்டிய விஷயம், நீர்த்துப் போக வைக்கப்படும் அரசு மருத்துவக் கட்டமைப்பு குறித்துதான். நீட் போன்ற வழிகளை கொண்டு, தமிழ் மாணவர்களை மருத்துவர்களாவது தடுக்கப்படுகிறது. மருத்துவக் கட்டமைப்பின் பல கண்ணிகள் தொண்டு நிறுவனங்களுக்கும் ஒப்பந்த தொழிலாளர் நிறுவனங்களுக்கும் தாரை வார்க்கப்பட்டு, அதன் வலிமை குறைக்கப்படுகிறது. கத்தியால் குத்திய இளைஞரின் தாய் கொடுக்கும் பேட்டிகளில் முக்கியமான விஷயமாக இடம்பெறுவது அரசு மருத்துவமனைகளில் போதிய பணியாளர்களும் மருத்துவர்களும் இல்லாததும் இருக்கும் மருத்துவர்கள் காட்டும் கடுமையும்தான். அரசு மருத்துவமனை பணியாளர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களாக இருக்கின்றன. எண்ணிக்கையும் குறைவு என்பதால், அவர்களின் பணிச்சுமை அதிகம் ஆகிறது. போலவே மருத்துவர்களின் எண்ணிக்கையும் குறைக்கப்படுவதால், அவர்களின் பணிச்சுமையும் அதிகமாகிறது.

அரசு மருத்துவர் பணி அளிக்கும் பணிச்சுமையை சுலபமாக அவர்களால் தூர எறிந்து விட முடியும். தனியார் மருத்துவமனைகளில் சேர்ந்து குறைந்த வேலை, அலட்சியம் மற்றும் கொழிக்கும் பணம் ஆகியவற்றுடன் வாழ்ந்து விட முடியும். ஆனால் அவர்கள் அரசுத்துறையில் நீடிப்பதற்கு காரணம், அவர்களின் விருப்பம் மட்டும்தான். குறைவான ஊதியத்துக்கு பெரும் பணிச்சுமையை எடுத்துக் கொள்ளும் அவர்களுக்கு, சோர்வும் அழுத்தமும் இயல்புதான். அவர்களுக்கு நாம் அதிகபட்சம் செய்யக் கூடியது, அதைக் கூட்டாமல் இருப்பது மட்டும்தான். உண்மையில் தமிழ்நாட்டில் மிக சிறந்த மருத்துவக் கட்டமைப்பு உண்டு. சோவியத் யூனியனின் மருத்துவக் கட்டமைப்பை பின்பற்றி, குக்கிராமம், கிராமம், மாவட்டம், நகரம் என எல்லா மட்டங்களிலும் ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்கி பன்னோக்கு மருத்துவமனைகள் வரை அடுக்கடுக்காக கொண்டிருக்கும் மருத்துவக் கட்டமைப்பு நம்மிடம் இருக்கிறது.

உண்மை என்னவெனில் இந்தக் கட்டமைப்புக்கான செலவு நம் அரசுக்கு மிகவும் அதிகம் என்பதுதான். இந்தக் கட்டமைப்பை இல்லாமலாக்கி அங்கு தன்னை நிரப்பிக் கொள்ளத்தான் தனியார்துறை மிக ஆவலுடன் முயன்று கொண்டிருக்கிறது. அதை இந்திய அரசுகளும் ஆர்வத்துடன் இருக்கிறது. தமிழ்நாடு அரசு மட்டும் அதற்கு இருக்கும் பாரம்பரிய கடமையுணர்ச்சியில் இருதலை கொள்ளி எறும்பாக நகர்ந்து கொண்டிருக்கிறது. அது ஒரு தலை எறும்பாக மாறுவதும் மிக மிக சுலபம்தான். பொது மருத்துவமனை வசதிகளை கடுமையாக குறைத்து விட்டால், எல்லாம் சரியாகி விடும்.

ஆனால் அதுதான் நமக்கு தேவையா?

கோவிட் காலத்தில் உத்தரப்பிரதேச அரசு கைகழுவியும் தன் சொந்த பணத்தை செலவழித்து உயிர்களை காக்க ஓடிய மருத்துவர் கஃபீல் கான். தமிழ்நாட்டிலோ கோவிட் காலத்தில் ஆக்சிஜன் பல்வேறு இடங்களில் இருந்து அரசே கொள்முதல் செய்தது. மருத்துவமனைகளுக்குள்ளேயே ஆக்சிஜன் உற்பத்தி உறுதி செய்யும் நிலை இருந்தது.

எது நமக்கு தேவை?

அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கட்டமைப்பு மீதான காழ்ப்பு நம்முள் தொடர்ந்து உருவாக்கப்படுவதை அடையாளம் கண்டு அதை முதலில் களைய வேண்டும். 'அன்பே சிவம்' படத்தில் கார்ப்பரெட் இளைஞன் பாத்திரத்தில் நடித்திருக்கும் மாதவன் இதே போல கூட்டம், வரிசை போன்றவற்றை கண்டு குறைபட்டுக் கொள்வார். 'இது இந்தியா சார்... இங்க கூட்டம், வரிசைல்லாம் இருக்கும். இதுதான் ஜனநாயகம். கோவில்ல போய் வாங்கற ஸ்பெஷல் தரிசனம்லாம் எதிர்பார்க்க முடியாது' என சிரிப்பார்.

எனவே மக்களுக்கான பொறுப்புணர்வு என்பதில் இருந்துதான் பொதுத்துறை இயங்குகிறது. அதில்தான் அரசு மருத்துவமனையும் இருக்கிறது. அங்குள்ள மருத்துவர்களும் அந்த பொறுப்புணர்வில் மட்டும்தான் அங்கு இருக்கிறார்கள். பணிச்சுமை அல்லது அலுப்பு காரணமாக அவர்கள் கொள்ளும் நடத்தையின் மீது நமக்கு விமர்சனம் இருக்குமெனில் அரசு மருத்துவமனைகளை மேம்படுத்துவதும் அரசு மருத்துவர்களின் நலன் உறுதிபடுத்துவதும் மட்டுமே நம் கோரலாக இருக்க வேண்டும். இந்தச் சம்பவம், அரசு மருத்துவத்தின் அலட்சியத்துக்கும் மக்கள் நலனுக்கு இடையிலான மோதல் கிடையாது இது. தனியார்மயத்தின் பிரசாரத்துக்கும் பொதுத்துறை பாதுகாப்புக்கும் இடையிலான மோதல் இது. காலநிலை மாற்றத்தால் கூடி வரும் நோய்களும் தொழில்நுட்பம் கொடுக்கும் அபரிமித தகவல்களாலும் இன்னும் இந்த சிக்கல் கூர்மைதான் அடையும். அதற்கேற்ப மருத்துவக் கட்டமைப்பையும் மருத்துவர் நலனையும் மேம்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

*(தோழர் ராஜ சங்கீதன் முகநூலில் இருந்து...)* ●

## தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்

# 15ஆம் மாநில மாநாடு

**2024 டிசம்பர் 13, 14, தோழர் நா.முனியாண்டிசாமி அரங்கம் (மாணிக்கம் மஹால்) தூத்துக்குடி**



**13.12.2024, வெள்ளிக்கிழமை, காலை 9.00 மணி**

### மாநில பிரதிநிதித்துவப் பேரவை

### பேரணி

*தொடங்கி வைப்பவர்*
**தெ.வாசுகி**
மாநில துணைப்பொதுச்செயலாளர்

### கொடியேற்றம்
### தியாகிகளுக்கு அஞ்சலி

## பொது அமர்வு

*தலைமை*
**சா.டானியல் ஜெயசிங்**
மாநிலத் தலைவர் (பொ)

*அஞ்சலித் தீர்மானம்*
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
மாநில துணைத் தலைவர்

*வரவேற்புரை*
**ஞா.ஞானராஜ்**
தலைவர், வரவேற்புக்குழு

*தொடக்கவுரை*
**அ.சவுந்தரராசன்** Ex. MLA.,
மாநிலத் தலைவர், சிஐடியு

*வாழ்த்துரை*
**நெ.இல.சீதரன்**
மாநிலத் தலைவர், TNGPA

**கு.வெங்கடேசன்**
மாநிலத் தலைவர், TANSA

**ச.மயில்**
பொதுச்செயலாளர், TNPTF

### மாநாட்டு மலர் வெளியிடுதல்

*மலர் வெளியிடுபவர்*
**எஸ்.ஆறுமுகம்**
மேனாள் மாநில துணைத்தலைவர்

*மலர் பெறுபவர்கள்*
**இரா. பீட்டர் பர்னபாஸ்**
மேனாள் மாநில துணைத்தலைவர்

**ப.திரவியம்**
மேனாள் மாவட்டத் தலைவர்

**ஆர்.ரசல்**
மாநிலச் செயலாளர், சிஐடியு

**பி.அல்போன்ஸ் லிகோரி**
மேனாள் மாவட்டத் தலைவர்

**எம்.நாகராஜன்**
தேசியத்தலைவர், AIFUCTO

### பணிநிறைவு பாராட்டு
**மு.அன்பரசு**
முன்னாள் மாநிலத் தலைவர்

*நிறைவுரை* **A.ஸ்ரீகுமார்**
பொதுச்செயலாளர், AISGEF

*நன்றியுரை* **உ.சுமதி** மாநிலச் செயலாளர்

**முற்பகல் 11.00 மணி**

### மாநில பிரதிநிதித்துவப் பேரவை

*தலைமை* **சா.டானியல் ஜெயசிங்**
மாநிலத் தலைவர் (பொ)

*வேலை & ஸ்தாபன அறிக்கை*
**ஆ.செல்வம்** பொதுச்செயலாளர்

*வரவு செலவு அறிக்கை* **மு.பாஸ்கரன்**
மாநிலப் பொருளாளர்

### மகளிர் அமர்வு

*அறிக்கை*
**சி.பரமேஸ்வரி**
மாநில துணைத் தலைவர்,
மாநில மகளிர் துணைக்குழு அமைப்பாளர்

*சிறப்புரை*
**பேரா. சா.சுபா**
மகளிரியல் துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்

*நன்றியுரை* **ஜெ.உமாதேவி**
மாவட்ட அமைப்பாளர்,
மகளிர் துணைக்குழு, தூத்துக்குடி

**14.12.2024, சனிக்கிழமை காலை 9.00 மணி**

### தீர்மானங்கள் முன்மொழிதல்

மாநில துணைத்தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஆ.பெரியசாமி**
**மு.செல்வராணி**

துணைப் பொதுச்செயலாளர்கள்
**மு.சீனிவாசன்**
**வெ.சோமசுந்தரம்**

மாநிலச் செயலாளர்கள்
**ச.ஹேமலதா**
**ஆ.அம்சராஜ்**
**ச.கோதண்டபாணி**
**அண்ணா.குபேரன்**

– மாநாட்டு வரவேற்புக்குழு

# மாவட்ட மாநாடுகள்

## வடசென்னை மாவட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வடசென்னை மாவட்ட 14 ஆம் மாநாடு பெரியமேடு சால்வேஷன் ஆர்மி கூட்ட அரங்கில் மாவட்டத் தலைவர் வே.விஜயகுமரன் தலைமையில் நடைபெற்றது

பேரணியுடன் துவங்கிய மாநாட்டில் AISGEF கொடியினை மாநில பொதுச் செயலாளர் ஆ. செல்வம் அவர்களும் TNGEA கொடியினை மாவட்ட தலைவர் வே .விஜயகுமரன் ஆகியோர் விண்ணதிர கோஷத்துடன் ஏற்றி வைத்தனர். ஸ்தூபிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.அஞ்சலி தீர்மானத்தை மாவட்ட இணைச் செயலாளர் ஜி வேலு அவர்கள் வாசிக்க 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.மாவட்ட இணைச் செயலாளர் ஜி மகேந்திரன் வரவேற்புரை நிகழ்த்தினார். மாவட்டத் தலைவர் வே .விஜயகுமரன் தலைமை உரை நிகழ்த்தினார். மாநாட்டை துவக்கி வைத்து மாநிலச் செயலாளர் அண்ணா குபேரன் தொடக்க உரை நிகழ்த்தினார்.மாநிலச் செயலாளர் அவர்களிடம் 974 உறுப்பினர் சந்தாவிற்கான தொகை வழங்கி 2382 உறுப்பினர் என்ற முறையில் நிறைவு செய்யப்பட்டது. மாவட்டச் செயலாளர் ம. அந்தோணிசாமி செயலாளர் அறிக்கையும், மாவட்ட பொருளாளர் ஏழுமலை வரவு செலவு அறிக்கையும் சமர்ப்பித்தனர்.

மாநிலத் துணைத் தலைவர் குணசேகரன், விவேகானந்தன், கோபிநாதன் மற்றும் மாவட்ட இணை செயலாளர் சுந்தரமூர்த்தி, குறளகம் பகுதி குழு தலைவர் நரேஷ் ,செயலாளர் முருகன், ஆவடி அம்பத்தூர் பகுதி குழு செயலாளர் வெங்கடகிருஷ்ணன், சென்னை மாநகராட்சி பகுதி குழு தலைவர் சீனிவாசலூ, செயலாளர் எஸ் ரவி, எழும்பூர் பகுதி குழு தலைவர் புகழானந்த், செயலாளர் அன்சர் பாஷா, தங்க சாலை பகுதி குழு செயலாளர் தாமோதரன் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். மாவட்ட இணைச்செயலாளர் சிவகுமார் தீர்மானங்களை வழிமொழிந்தார். தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இந்திய தொழிற்சங்க மையத்தின் மத்திய சென்னை மாவட்ட தலைவர் தோழர் தயாளன் அவர்களும், அகில இந்திய தணிக்கை மற்றும் கணக்கு அலுவலர்கள் சங்கத்தின் அகில இந்திய தலைவர் தோழர் எம் ரமேஷ் அவர்களும், தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி மாநிலச் செயலாளர் தோழர் சத்யநாதன் அவர்களும், தமிழ்நாடு அரசு உயர்நிலை மேல்நிலை பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் மாநில பொருளாளர் தோழர் விஜய் சாரதி அவர்களும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தென்சென்னை மாவட்ட செயலாளர் தோழர் முத்துக்குமாரசாமி வேல் அவர்களும், சென்னை மாநகராட்சி செங்கொடி சங்கத்தின் தலைவர் தோழர் பட்டாபி அவர்களும் வாழ்த்துரை வழங்கினர். ஐந்து பகுதி குழுக்களில் ஐந்து ஆண் தோழர்கள் ஒரு பெண் தோழரின் விவாதத்திற்கு பிறகு தொகுப்புரை வழங்கி மாவட்ட செயலாளர் அறிக்கை மற்றும் மாவட்ட பொருளாளர் அறிக்கை ஒரு மனதாக நிறைவேறியது. வடசென்னை மாவட்டத்தில் புதிய மாவட்ட நிர்வாகிகளாக கீழ்கண்டவர்கள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

மாவட்டத் தலைவர். வே விஜயகுமரன் மருந்தாளுநர். மாவட்ட செயலாளர். ம.அந்தோணிசாமி. இளநிலை பொறியாளர் மருத்துவத்துறை. மாவட்ட பொருளாளர் த.ஏழுமலை.ஆய்வக நுட்பனர். மாவட்டத் துணைத் தலைவர்கள். ஜி. வேலு, மாநகராட்சி, மு.விவேகானந்தன், தொழில்நுட்பம் மருத்துவத்துறை, கார்த்திகேயன், வருவாய்த்துறை கோபி, வணிகவரித்துறை மாவட்ட இணைச் செயலாளர்கள் ஜே சரஸ்வதி, SHN, மாநகராட்சி சிவக்குமார், அமைச்சுப் பணியாளர், மாநகராட்சி சுந்தரமூர்த்தி, சத்துணவு துறை அன்சர் பாஷா, ஆவண காப்பகம். 15 ஆம் மாநில மாநாட்டு பிரதிநிதிகளாக வடசென்னை மாவட்டத்தில் இருந்து 12 தோழர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மேனாள் மாநிலத் தலைவர் மு. அன்பரசு அவர்களுக்கு சங்கப் பணியை பாராட்டி நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. தோழரின் பணியை பாராட்டி மாவட்டச் செயலாளர் உரை நிகழ்த்த, முன்னாள் மாநிலத் தலைவர் தோழர் அன்பரசு அவர்கள் ஏற்புரையாற்றினார். மாநாட்டின் நிறைவாக தமிழ்நாடு அரசு ஊழிய சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் ஆ. செல்வம் நிறைவுரை நிகழ்த்தினார். மாநில பொதுச் செயலாளர் அவர்களிடம் தொடர் ஓட்டம் புத்தகத்தின் மற்றும் மகளிர் மாநாட்டு விளம்பரம் தொகை மற்றும் நாட்குறிப்பு நிலுவையில் ஒரு பகுதி என ரூபாய் 48,900 காசோலை வழங்கப்பட்டது.

மாவட்ட இணைச்செயலாளர் சிவகுமார் நன்றியுரை நிகழ்த்த மாநாடு சிறப்பாக நிறைவு பெற்றது. இம்மாநாட்டில் முன்னாள் மாநில பொருளாளர் தோழர் ஞானகுரு, முன்னாள் மாநிலத் துணைத் தலைவர் தோழர் வெற்றி ராஜன், முன்னாள் மாநில துணைத்தலைவர் தோழர் தியாகராஜன், முன்னாள் மாவட்டத் தலைவர் தோழர் சுந்தராம்பாள், முன்னாள் மாவட்ட துணைத் தலைவர் தோழர் பத்மநாபன் ஆகியோர் பங்கேற்றனர். பொது மாநாட்டில் 120 தோழர்களும் பிரதிநிதிகள் மாநாட்டில் 74 தோழர்களும் பங்கேற்றனர்

## தென்காசி மாவட்டம்

தென்காசி மாவட்டத்தின் 2வது மாவட்ட மாநாடு 23.11.2024 அன்று நடைபெற்றது. இம்மாநாட்டின் முதல் நிகழ்வாக தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கொடியினை மாவட்ட தலைவர். பி.கே.மாடசாமியும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடியை மாநிலத் துணைத் தலைவர் கிறிஸ்டோபரும் ஏற்றி வைத்தனர். இம்மாநாட்டில் மாவட்டத் தலைவர் பி.கே.மாடசாமி தலைமை தாங்கினார்.மாவட்ட இணைச்செயலாளர் ராதாகிருஷ்ணன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார்.மாவட்ட மகளிர் துணை குழு அமைப்பாளர் செல்விவரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் சங்கரி தொடக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் துரைசிங் வேலை அறிக்கை சமர்ப்பித்தார். மாவட்டப் பொருளாளர் வேல்ராஜன் பொருளாளர் அறிக்கையை சமர்ப்பித்தார். அறிக்கையின் மீது விவாதம் நடைபெற்று தொகுப்புரை வழங்கப்பட்டது.

இம்மாநாட்டினை தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் சீனிபாண்டி, தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் முன்னேற்ற சங்கத்தின் மாநிலச் செயலாளர் சின்ராஜ், ஒருங்கிணைந்த இந்திய முறை மருந்தாளுநர் சங்கத்தின் மாநில தலைவர் மோகன்ராஜ், தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் குமார், தமிழ்நாடு MRB செவிலியர்கள் மேம்பாட்டு சங்கத்தின் மாவட்டத் தலைவர் பெலிக்ஸ் மோனிகா, தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர்

அண்ணாதுரை, தமிழ்நாடு சமூக நலத்துறை பணியாளர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் அகஸ்தியன், தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலை பணியாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் பாபுராஜ், தமிழ்நாடு மக்கள் நல பணியாளர் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் புதியவன் ஆகியோர்வாழ்த்துரை வழங்கினர். தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். புதிய நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி மாநிலத் துணைத் தலைவர் சி.எஸ்.கிறிஸ்டோபர் நிறைவுரையாற்றினார். இறுதியாக மாநில செயற்குழு உறுப்பினரும் புதிய மாவட்ட செயலாளருமான வெங்கடேஷ் நன்றியுரை ஆற்றினார். தென்காசி மாவட்ட 2வது மாவட்ட மாநாட்டில் கீழ்க்கண்ட புதிய மாவட்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட தலைவர் கோபி, (ஊரகவளர்ச்சித்துறை). மாவட்ட துணைத் தலைவர்கள், சண்முகம் (வேளாண்மைத்துறை), பாலசுப்பிரமணியன் (நில அளவைத்துறை), மார்த்தாண்ட பூபதி (வேலைவாய்ப்புத்துறை), இசக்கித்துரை (வருவாய் துறை), மாவட்டச் செயலாளர் வெங்கடேஷ் (பட்டுவளர்ச்சித்துறை), மாவட்ட இணைச் செயலாளர்கள் சேகர்( தொழிற்பயிற்சி துறை), ராஜ்( கூட்டுறவுத்துறை), அன்பரசு (ஊரகவளர்ச்சித்துறை), புதியவன்

(ஊரகவளர்ச்சித்துறை), மாவட்டப் பொருளாளர் வேல்ராஜன் (நெடுஞ்சாலைத்துறை), மாவட்டத் தணிக்கையாளர்கள் சீனிவாசன் (ஊரகவளர்ச்சித்துறை), ராதாகிருஷ்ணன் (புள்ளியல் துறை)

## தென் சென்னை மாவட்டம்

தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தென் சென்னை மாவட்ட 14 ஆம் பேரவை மற்றும் மாநாடு 23.11.24 அன்று DMS அருகில் உள்ள BEFI அலுவகத்தில் பேரணியோடும் கொடியேற்றத்துடனும் துவங்கியது.

மாவட்ட தலைவர் சி.கலைச்செல்வி தலைமை தாங்கி நடத்தினார். மாவட்ட இணை செயலாளர் சி.ரவிராஜ் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட துணைத்தலைவர். து.அஸ்வினி கிரேஸ் வரவேற்புரை வழங்கினார். மாநிலச் செயலாளர், உ.சுமதி தொடக்கவுரையாற்றினார். மாவட்ட செயலாளர் த.முத்துக் குமாரசாமிவேல் செயலாளர் அறிக்கை சமர்பித்தார். மாவட்ட பொருளாளர். பெ.ஜெயராமன், பொருளாளர் அறிக்கை சமர்பித்தார். CITU வின் தென்சென்னை மாவட்டச் செயளாளர் ப.பாலக்கிருஷ்ணன், TNHHSSGTA மாநில பொருளாளர் ம.விஜயசாரதி, தமிழ்நாடு கணக்காயர் அலுவலக சங்கம் மாநிலத் தலைவர் ரமேஷ், அரசு ஊழியர் சங்கத்தின் வடசென்னை மாவட்டச் செயலாளர் ம.அந்தோணிசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பகுதி நிர்வாகிகள் தீர்மானங்களை முன் மொழிந்தனர். அறிக்கை மீதான விவாதம் நடைபெற்றது. மாநாட்டு தீர்மானங்கள் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

மாநில மாநாட்டில் பங்குபெற பிரதிநிதிகள் முன்மொழியப்பட்டு இறுதி செய்யப்பட்டனர். பேரவையில் தேர்வு செய்யப்பட்ட புதிய நிர்வாகிகள் பின்வருமாறு தலைவர் ஆ.கோபிநாதன். செயலாளர் .த. முத்துக் குமாரசாமிவேல், பொருளாளர் .பெ. ஜெயராமன், துணைத் தலைவர்கள் மு.சாலக்குமார், ஜா.வே. அருள் டேனியல், து.அஸ்வினி கிரேஸ் ஜெப ப்பிரியா, கண்ணன். இணைச் செயலாளர்கள் இ. ரேணுகாதேவி,இரா.சி. ரவிராஜ், கே.பாலாஜி பிரசாத், மகேந்திரன். தணிக்கையாளர்கள் N. ரமேஷ் மற்றும் சௌமியா மாநாட்டில் மேனாள் மாநில தலைவர் மு.அன்பரசு அவர்களின் பணி நிறைவிற்கு பாராட்டு தெரிவித்து மரியாதை செய்யப்பட்டது. நிறைவாக மாநில தலைவர் (பொ) சா.டானியல் ஜெயசிங் நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச் செயலாளர் கே.பாலாஜி நன்றியுரை வழங்க மாநாடு நிறைவுபெற்றது.

## தேனி மாவட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 15 வது தேனி மாவட்ட மாநாடு தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி அரங்கத்தில் 23.11.2024 நடைபெற்றது. மாவட்ட மாநாட்டில் தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகள் விவரம். தலைவர்: ச.தாஜுதீன் (உள்ளாட்சி நிதி தணிக்கை துறை) செயலாளர்: க.முத்துக்குமார் (நெடுஞ்சாலைத்துறை) பொருளாளர்: வெ.நாகராஜன் (வருவாய்த் துறை) மாவட்டத் துணைத் தலைவர்கள் 1)க.லட்சுமி (சத்துணவு) 2)சு.ரவிக்குமார் (கூட்டுறவுத் துறை) 3)க.சக்தி திருமுருகன் (ஊரக வளர்ச்சித்துறை) 4) பொ.அழகுராஜு (பிற்பட்டோர் நலத்துறை) இணைச் செயலாளர்கள் 1) இரா.மலர்விழி (மருத்துவத் துறை) 2)பா.சி.தமிழ் பரமன் (மருத்துவத் துறை) 3) இரா.விஸ்வன் (கூட்டுறவுத் துறை) 4)ம.பரமேஸ்வரன் (சாலைப் பணி) மாவட்டத் தணிக்கையாளர்கள் 1)நா.விமல் (ஊரக வளர்ச்சித் துறை) 2)சி.மலர்க் கொடி

## திருப்பூர் மாவட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருப்பூர் மாவட்ட 6- ஆவது மாவட்ட மாநாட்டில் மாவட்டத் தலைவர். அ.ராணி மாவட்ட துணைத் தலைவர்கள் S.மதன்குமார் J.அந்தோணி ஜெயராஜ். மா.பாண்டியம்மாள், T.புஷ்பவள்ளி மாவட்டச் செயலாளர் மா.பாலசுப்பிரமணியன். இணைச் செயலாளர்கள் R.ராமன், S.ராணி. M.மேகலிங்கம் T.வைரமுத்து மாவட்ட பொருளாளர் S.முருகசாமி மாவட்ட தணிக்கையாளர்கள் N.பசுபதி S.மார்க்கண்டன் ஆகியோர் மாவட்ட நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

## திருவாரூர் மாவட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர்சங்கத்தின் திருவாரூர் 15ஆம் மாவட்ட மாநாட்டில் புதிதாக தேர்வு செய்யப்பட்டுள்ள புதிய நிர்வாகிகள் பட்டியல் பின்வருமாறு.

மாவட்டத் தலைவர். எஸ். சுதாகர்(வேளாண்மைத்துறை) மாவட்டச் செயலாளர். எஸ்.செங்குட்டுவன் (கிராம நிர்வாக அலுவலர்) மாவட்டப் பொருளாளர். ஏ.வி. சுப்பிரமணியன் (ஊரக வளர்ச்சித்துறை)மாவட்ட துணைத்தலைவர்கள் 1. வி.தெட்சிணாமூர்த்தி (வருவாய்கிராம ஊழியர்) 2. த.தமிழ்சுடர் (ஊரக வளர்ச்சித்துறை) 3.பி.விஜயன் (கூட்டுறவுத்துறை) 4.டி.கருணாமூர்த்தி (வருவாய்த்துறை) மாவட்ட இணைச்செயலாளர்கள் 1.ஏ.தனபால் (சாலைப்பணியாளர் சங்கம்) 2.பி.பரமேஸ்வரி( VHN) 3.த.சுகுமார் (வருவாய்த்துறை) 4.ஆர்.மகாலெட்சுமி (சத்துணவு)

## திருவள்ளூர் மாவட்ட ம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க திருவள்ளூர் மாவட்ட மாநாடு 19.11.2024 காலை 10.00 மணிக்கு தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க கட்டிடத்தில் மாவட்டத் தலைவர் க. திவ்யா தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இணைச் செயலாளர் கௌ. மெல்கி ராஜாசிங் அஞ்சலி தீர்மானத்தை வாசித்தார். மாவட்டத் துணைத்தலைவர் மா. சந்திரமோகன் வரவேற்புரையாற்றினார்.TNGEA மேனாள் மாவட்டத் தலைவரும் மற்றும் திருவள்ளூர் TNPA மாவட்டத் தலைவருமான கோ. இளங்கோவன் மாநாட்டை தொடங்கி வைத்து உரையாற்றினார்.மாவட்டச் செயலாளர் க. வெண்ணிலா மாநாட்டு அறிக்கையினை சமர்ப்பித்து உரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் பா.மணிகண்டன் நிதிநிலை அறிக்கையினை சமர்ப்பித்தார்.

TNRDOA மாநில துணைத்தலைவர் சீ.காந்திமதி நாதன் , TNROA மாநில துணைத் தலைவர் ஏ. மணிகண்டன், T NRDOA மாவட்டச் செயலாளர் அ. மணிசேகர், சத்துணவுதுறை மாவட்டத்தலைவர் . ஜெ. கன்னியப்பன் TAMSA மாவட்ட செயலாளர் .அ,கோவிந்தன், TAMSA மேனாள் மாநில துணைத்தலைவர் மற்றும் TNPA வட்டக்கிளைத் தலைவர் எம். யோகராசு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். விவாதங்களுக்கு பின்னர் தொகுப்புரை வழங்கி அறிக்கைகள் ஒப்புதல் பெறப்பட்டது.

புதிய ஓய்வூதிய திட்டத்தை கைவிட்டு பழைய ஓய்வூதியத்தை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட 30 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. வட்டக்கிளை தோழர்கள் திருவள்ளூர் சரவணகுமார், ஊத்துக்கோட்டை வைத்தியலிங்கம் கும்மிடிப்பூண்டி நாகராஜன், பூந்தமல்லி குணசேகரன், பள்ளிப்பட்டு சேஷாச்சலம் பொன்னேரி மோகன்தாஸ் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். மாவட்ட நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. மாவட்டத் தலைவராக க.திவ்யா TAMSA துணைத் தலைவர்களாக 1)சீ.காந்திமதிநாதன் TNRDOA 2) ஏ. மணிகண்டன் TNROA 3 ) க. குணசேகரன் Commercial Tax மாவட்டச் செயலாளராக க.வெண்ணிலா TNROA இணைச் செயலாளர்களாக 1) கௌ. மெல்கிராஜாசிங், TNRDOA 2) க. மேகநாதன் Co. Operative 3) மேகநாதன் Survey மாவட்டப் பொருளாளராக பா. மணிகண்டன், சத்துணவுத்துறை ஆகியோர் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். தணிக்கையாளர்களாக 1) எ. கோவிந்தன், TAMSA 2) ப. கஜேந்திரன், TNROA

பணி ஓய்வு பெற்ற முன்னாள் மாவட்ட, வட்ட நிர்வாகிகளுக்கு பாராட்டி மரியாதை செய்யப்பட்டது. என். தேவ அதிசயம் மா.து.த, என்.திருநாவுக்கரசு மா.இ.செ, மா. சந்திரமோகன் மா.து.த, பி.வி.நாயகம் வ.த. பொன்னேரி ஆகியோர்களுக்கு பாராட்டு விழா நடைபெற்றது. மாநிலச் செயலாளர் உ.சுமதி, நிறைவுரையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் மோகன்தாஸ் நன்றி கூறினார்.

## செங்கல்பட்டு மாவட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க செங்கல்பட்டு மாவட்ட மாநாடு 16-11- 2024 சனிக்கிழமை காலை 11 மணியளவில் கொடியேற்ற நிகழ்ச்சியோடு துவக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க கொடியை மாவட்ட செயலாளர் சா. முகம்மது உசேன் , அகில

இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளன கொடியை மாவட்ட தலைவர் கே. பூங்குழலி ஆகியோர் ஏற்றி வைத்தனர். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்திய பின் மாநாடு மாவட்டத் தலைவர் கே. பூங்குழலி தலைமையில் துவங்கியது. முதல் நிகழ்வாக அஞ்சலி தீர்மானத்தை மாவட்ட இணைச் செயலாளர் எம்.தாமோதரன் வாசித்தார் . வரவேற்பு குழு தலைவர் எம்.சீனுவாசன் வரவேற்புரை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக முன்னாள் மாவட்ட துணைத் தலைவர் இ. சங்கரதாஸ் மாநாட்டை முறைப்படி தொடங்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து கடந்த கால நிகழ்வுகள் மற்றும் ஸ்தாபன அறிக்கையை மாவட்ட செயலாளர் சமர்ப்பித்தார். மாவட்ட பொருளாளர் வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தார். அனைத்து வட்ட கிளைகளில் இருந்து பிரதிநிதி தோழர்கள் அறிக்கை மீது விவாதம் நிகழ்த்திய பின் நடைபெற்ற மாவட்ட செயற்குழுவில் மாநாட்டில் நடைபெற்ற விவாதங்களுக்கு தொகுப்புரையும் அடுத்த மூன்றாண்டுகளுக்கான நிர்வாகிகள் முன்மொழிவும் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது. தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் பி.குணசேகரன் தமிழ்நாடு நில அளவை ஒன்றிப்பின் மாவட்ட செயலாளர் எஸ்.பிரபு ,இந்திய தொழிற்சங்க மையத்தின் மாவட்ட பொறுப்பாளர் கலைச்செல்வி, தமிழ்நாடு அரசு அனைத்து ஓய்வூதியர் சங்க மாவட்ட தலைவர் என். இளங்கோ, தமிழ்நாடு சத்துணவு மற்றும் அங்கன்வாடி ஓய்வூதிய சங்க மாநில பொதுச் செயலாளர் பி. ராமமூர்த்தி, தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் என். சசிகலா, தமிழ்நாடு கருவூல கணக்குத் துறை அலுவலர் சங்க மாநில பொதுச் செயலாளர் வெ.லெனின் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாவட்ட துணைத்தலைவர்கள் ஆர். கோவிந்தன், டி.கன்னியப்பன், மாவட்ட இணைச் செயலாளர் ஆர்.லோகநாதன், மாநில செயற்குழு உறுப்பினர் எஸ்.வசந்தகுமார் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். தீர்மானங்கள் அனைவராலும் ஏக மனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு மாநாட்டில் நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து புதிய மாவட்ட நிர்வாகிகளுக்கான முன்மொழிவு வைக்கப்பட்டு தேர்வு செய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மகளிர் மாநாடு மாவட்ட தலைவர் கே. பூங்குழலி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட இணைச் செயலாளர் எஸ்.புஷ்பலதா வரவேற்புரை நிகழ்த்தினார். மாவட்ட மகளிர் துணைக் குழு அமைப்பாளர் டி .ஜெயசுதா மகளிர் மாநாடு அறிக்கையை சமர்ப்பித்தார். அறிக்கை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் தமிழ்நாடு நில அளவை ஒன்றிப்பின் மாநில செயலாளர் அ. பேபி சிறப்புரை நிகழ்த்தினார். இறுதியாக மாநிலச் செயலாளர் உ.சுமதி மாநில மைய முடிவுகள் மற்றும் சங்கம் செல்ல வேண்டிய பாதை ஆகியவற்றை பற்றி விரிவான நிறைவுரை நிகழ்த்தினார். அதனை தொடர்ந்து வரவேற்பு குழு செயலாளர் வெங்கடேசன் நன்றியுரை நிகழ்த்த மாநாடு நிறைவு பெற்றது. இம்மாநாட்டில் தேர்வு செய்யப்பட்டுள்ள நிர்வாகிகள் மாவட்ட தலைவர் கே.பூங்குழலி.

மாவட்ட துணைத்தலைவர்கள் 1)ஆர். வெங்கட்ரமணன் 2) ஆர்.கோவிந்தன் 3) அ.பேபி 4) டி.கன்னியப்பன் மாவட்ட செயலாளர் சா.முகம்மது உசேன் மாவட்ட இணைச்செயலாளர்கள் 1)எம்.தாமோதரன் 2) ஆர்.லோகநாதன் 3) எஸ்.புஷ்பலதா 4) வெ.சுதர்சன் மாவட்ட பொருளாளர் வே.விக்டர் சுரேஷ்குமார் தணிக்கையாளர்கள் 1) கே.முத்துராமன். 2) ஜி.சுதர்சன்து த்துக்குடியில் நடைபெறவுள்ள 15 வது மாநில மாநாட்டில் பங்கேற்கும் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் தேர்வு செய்யப்பட்னர். 1)வே.விக்டர் சுரேஸ்குமார் 2) டி.கன்னியப்பன் 3) எம். தாமோதரன் 4) வெ.லெனின் 5) கார்த்திகேயன் 6) எம்.வேல்முருகன் 7)என்.பாலாஜி 8) ஜி.சுதர்சன் 9) என்.சசிகலா 10) முத்துலட்சுமி

## நாகப்பட்டினம் மாவட்டம்

நாகப்பட்டினத்தில் நடைபெற்ற தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் 15-வது மாவட்ட மாநாட்டில் கீழ்கண்டோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மாவட்டத் தலைவர் சு.வளர்மாலா (ஊரக வளர்ச்சித்துறை) துணைத் தலைவர்கள் எஸ்.அருளேந்திரன்

(சத்துணவு) டி.சசிகலா( சத்துணவு) எஸ். சுகுமார்( ஊரக வளர்ச்சித்துறை)எஸ்.கணேசன் (நெடுஞ்சாலைத்துறை சாலைப்பணியாளர்) மாவட்டச் செயலாளர் அ.தி.அன்பழகன் (உணவு பாதுகாப்புத்துறை) இணைச் செயலாளர்கள் ஜெ.ஜம்ருத்நிஷா (ஊரக வளர்ச்சித்துறை) டி.செந்தமிழ்ச் செல்வி (சத்துணவு) உ.சண்முகம் (மருந்தாளுநர்) வே.பத்மநாபன் (வருவாய்த்துறை) மாவட்டப் பொருளாளர் ப.அந்துவன்சேரல் (புள்ளியியல் துறை) தணிக்கையாளர்கள்வி .உதயகுமார் (நெடுஞ்சாலைத்துறை சாலைப்பணியாளர்) சி.பாலசுப்பிரமணியன் (நகராட்சி நிர்வாகம்) மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர்: வே.சித்ரா (சத்துணவு) மாநில பிரதிநிதித்துவப் பேரவை உறுப்பினர்கள் 1. ப.அந்துவன்சேரல் 2. த.ஸ்ரீ தர் 3. கே.இரவிச்சந்திரன் 4. பாலாம்பாள் 5. டி.சசிகலா.

## கரூர் மாவட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கரூர் மாவட்ட 13- ஆவது மாவட்ட மாநாடு சங்க அலுவலக கூட்டரங்கில் (தோழர் வி.டி. ராஜேந்திரன் நினைவரங்கம்) சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டிற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் எம்.எஸ்.அன்பழகன் தலைமை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் சி.கண்ணன் வரவேற்று பேசினார். மாவட்ட இணைச் செயலாளர் ஆ.சங்கர் அஞ்சலி தீர்மானத்தை வாசித்தார். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் ஆ.பெரியசாமி மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார். மாவட்ட செயலாளர் பொன். ஜெயராம் வேலை அறிக்கையையும் , மாவட்ட பொருளாளர் எல்.பாலசுப்பிரமணி வரவு-செலவு அறிக்கையையும் முன் வைத்தனர். சி.ஐ.டி. யு சங்க மாவட்ட தலைவர் ஜி.ஜீவானந்தம் சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாவட்ட தலைவர் எம்.ஏ.ராஜா, வருவாய்த்துறை அலுவலர்கள் சங்க மாவட்ட தலைவர் இரா.மோகன்ராஜ், தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் கெ.சக்திவேல், மாவட்டத் தலைவர் சாமுவேல் சுந்தரபாண்டியன், தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் மாவட்ட செயலாளர் ஐ.ஜான்பாட்ஷா ஆகியோர் மாநாட்டை வாழ்த்தி பேசினர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைத்தலைவர் எம். செல்வராணி மாநாட்டை நிறைவு செய்து நிறைவுறையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் வ.கோபி நன்றி கூறினார். மாநாட்டில் புதிய நிர்வாகிகளாக மாவட்ட தலைவர் எம். எஸ்.அன்பழகன்(வருவாய்த்துறை), மாவட்ட செயலாளர் பொன் ஜெயராம்(கல்வித்துறை), மாவட்ட பொருளாளர் எல்.பாலசுப்பிரமணி (நெடுஞ்சாலைத்துறை), மாவட்ட துணை தலைவர்கள் சி.கண்ணன்(மருத்துவத்துறை), வி.முருகேசன்(பேரூராட்சி துறை), எம். கிருஷ்ணமூர்த்தி(ஊரக வளர்ச்சி துறை), ந.தமிழரசன்(நில அளவைத் துறை), மாவட்ட இணைச் செயலாளர்கள் கே.இளங்கோ(சுகாதாரத்துறை), ஆ.சங்கர்(வேளாண்மை துறை), பா.பிரவீனா(மருத்துவத்துறை), பி.பாஸ்கரன்(சத்துணவு துறை), மாநில செயற்குழு உறுப்பினர் வ.கோபி(கல்வித்துறை), மாவட்ட தணிக்கையாளர்கள் கே.செல்லமுத்து(பொதுப்பணித்துறை) , தமிழ்மணி(சத்துணவு துறை) மாவட்ட மகளிர் துணை குழு அமைப்பாளராக தோழர்.இரா முத்துமாரி(மருத்துவத்துறை) , மாவட்ட மகளிர் துணை குழு உதவி அமைப்பாளராக தோழர் காயத்ரி (வருவாய்த்துறை) ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## விருதுநகர் மாவட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க விருதுநகர் மாவட்டத்தின் 15 -வது மாவட்ட மாநாடு 16.11.2024 அன்று தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழக சங்க அலுவலகத்தில் நடைபெற்றது.

கொடியேற்றுதல் மற்றும் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துதல் நடைபெற்றது.மாவட்டத் தலைவர் த.பால்முருகன், தலைமையேற்றார். மாவட்ட துணைத் தலைவர் V.பாரதிஅஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்ட இணைச் செயலாளர் எஸ்.மணிமாலாபாண்டியன் வரவேற்புரையாற்றினார். CITU மாநிலச் செயலாளர் எம்.மகாலெட்சுமி மாநாடு

தொடக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் கா.கருப்பையா வேலை அறிக்கை வாசித்தார். மாவட்டப் பொருளாளர் C. முத்து வெள்ளையப்பன் பொருளாளர் அறிக்கை சமர்ப்பித்தார். மகளிர் துணைக் குழு அமைப்பாளர் என்.சரோஜினிதேவி மகளிர் துணைக் குழு அறிக்கை வழங்கினார். மா.ஜெகதீசன் மேனாள் மாவட்ட தலைவர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், வெ.குருசாமி-மாவட்டத் தலைவர், தமிழ்நாடு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம், த.இர.செல்வகணேசன், மாவட்ட செயலாளர்-தமிழ்நாடு ஆரம்பபள்ளி ஆசிரியர் கூட்டணி, M.இன்பம் மாவட்ட தலைவர்,

தமிழ்நாடு ரேடியோ கிராஃபர் அசோசியேஷன் சங்கம், எம்.மகாலிங்கம் மாநில பொருளாளர் தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளி கல்வித்துறை, இரா.இன்பராஜா மாவட்ட தலைவர் தமிழ்நாடு சமூகநலத்துறை பணியாளர் சங்கம்,P.பாண்டித்துரை மாவட்டத் தலைவர் தமிழ்நாடு அனைத்து ஆய்வுக நூட்பனர் சங்கம், மா.முருகன்செந்தில்வேல் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை சாலைப் பணியாளர் சங்கம், எம்.ரமேஷ் தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கம், V.தமிழ்செல்வி மாவட்ட தலைவர் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கம் மற்றும் தோழமை சங்க நிர்வாகிகள் மற்றும் துறைவாரி சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர். அறிக்கை மீதான விவாதம் நடைபெற்றது.விவாதங்களுக்கு தொகுப்புரை வழங்கப்பட்ட பின், புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. மாவட்ட இணைச் செயலாளர்கள்எஸ்.ஜேசுடெல்குயின் மற்றும் இரா. ஸ்ரீ முகுந்தன் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிய மாநில செயற்குழு உறுப்பினர் ஆர்.போத்திராஜ் வழிமொழிந்தார். அனைவரின் ஒப்புதலுடன் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிறைவாக மாநில துணைப் பொதுச் செயலாளர் வெ.சோமசுந்தரம் புதிய நிர்வாகிகளை அறிமுகம் செய்து நிறைவுரையாற்றினார். புதிய மாவட்ட தலைவராக பொறுப்பேற்ற P.பாண்டித்துரை நன்றியுரையாற்றினார்.

## மயிலாடுதுறை மாவட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மயிலாடுதுறை மாவட்ட மாநாடு (15.11.2024) காலை 11.00 மணிக்கு மாவட்ட துணைத் தலைவர் M.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. TNGEA கொடியினை மாவட்ட துணைத் தலைவர் M.ராமச்சந்திரன் அவர்களும், AISGEF கொடியினை மாநிலச் செயலாளர் S.கோதண்டபாணி அவர்களும் ஏற்றிவைத்தனர். மாவட்ட இணைச் செயலாளர் D.சிங்காரவேலு அஞ்சலி தீர்மானத்தை முன்மொழிந்தார். மயிலாடுதுறை வட்டத் தலைவர் R.கலா வரவேற்புரையாற்றினார். மாநில துணை பொதுச் செயலாளர் தோழர் V.சோமசுந்தரம் மாநாட்டை துவக்கிவைத்து உரையாற்றினார். மாவட்டச் செயலாளர் D.இளவரசன் மாநாட்டு அறிக்கையினை சமர்ப்பித்து உரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் (பொ) K.ஜவஹர் நிதிநிலை அறிக்கையினை சமர்ப்பித்தார்.

TARATDAC மாவட்டத் தலைவர் D.கணேசன், JAC பொதுச் செயலாளர் T.ராயர், TNGPA மாவட்டச் செயலாளர் V.பழனிவேலு, TNPGTA மேனாள் மாநிலப் பொருளாளர் R.ராதாகிருஷ்ணன், TNRDOA மேனாள் மாநிலப் பொருளாளர் V.நாகராஜன், மாவட்ட துணைத் தலைவர் M.நடராஜன், TNROA மாவட்டச் செயலாளர் S.தென்னரசு, TNNMEA மாவட்ட துணைத் தலைவர் K.ராமதேவன், நாகை, மேனாள் வட்டச் செயலாளர் M.தமிழ்வாணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

விவாதங்களுக்கு பின்னர் தொகுப்புரை வழங்கி அறிக்கைகள் ஒப்புதல் பெறப்பட்டது. புதிய ஓய்வூதிய திட்டத்தை கைவிட்டு பழைய ஓய்வூதியத்தை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட 20 அம்ச அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. மாவட்ட இணைச் செயலாளர்கள் R.முருகானந்தம், S.வெங்கடேசன், சீர்காழி வட்டத் தலைவர் T.ராஜேஷ்குமார், குத்தாலம் வட்டத் தலைவர் R.மதியழகன், தரங்கம்பாடி வட்டத் தலைவர் A.சாந்தி ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். அதற்கு பிறகு மாவட்ட நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. மாவட்டத் தலைவராக R.கலா, சத்துணவுத்துறை துணைத்

தலைவர்களாக 1) M.ராமச்சந்திரன், கிராம நிர்வாக அலுவலர் 2) R.முருகானந்தம், நில அளவைத்துறை 3) D.சிங்காரவேலு, சத்துணவு 4) R.வெங்கடகிருஷ்ணன், ஊரக வளர்ச்சித்துறை. மாவட்டச் செயலாளராக D.இளவரசன், வருவாய்துறை. இணைச் செயலாளர்களாக 1) T.மணிகண்டன், வேளாண்மைத்துறை 2) V.நடராஜன், கூட்டுறவுத்துறை, 3) P.கணேசன், நகராட்சி 4) S.சிவக்குமார், வேளாண்மைத்துறை. மாவட்டப் பொருளாளராக K.ஜவஹர் ஆகியோர் மாவட்ட நிர்வாகிகளாக மாநாட்டில் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1) D.சிங்காரவேலு, சத்துணவு 2) B.ராஜமோகன், வருவாய்துறை 3) A.சாந்தி, சத்துணவு 4) K.ஜவஹர், நெடுஞ்சாலைத்துறை 5) R.வெங்கடகிருஷ்ணன், ஊரக வளர்ச்சித்துறை 6) S.வெங்கடேசன், நெடுஞ்சாலைத்துறை ஆகியோர் மாநில மாநாட்டு பிரதிநிதிகளாக ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் R.கலா தலைமையில் நடைபெற்ற மகளிர் மாநாட்டில் மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளராக R.திவ்யா அவர்களும்,

உறுப்பினர்களாக 1) S.வேம்பு 2) A.சாந்தி 3) மாலா 4) சரோஜினி 5) ராஜேஸ்வரி 6) தமிழ்வாணி 7) சிந்துஜா ஆகியோர் கொண்ட மாவட்ட மகளிர் துணைக்குழு அமைக்கப்பட்டது. மாநிலச் செயலாளர் S.கோதட்டபாணி, நிறைவுரையாற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் S.ரமேஷ் நன்றி கூறினார். மாநாட்டில் 43 பெண்கள் உட்பட 85 தோழர்கள் பங்கேற்றனர்.

## கோயம்புத்தூர் மாவட்டம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் கோயம்புத்தூர் மாவட்ட மாநாடு 23.11.2024 சனிக்கிழமை அன்று மிக எழுச்சியோடு நடைபெற்றது. கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் முன்புறத்தில் இருந்து, பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்த வேண்டும், காலமுறை ஊதியம் வழங்க வேண்டும், தமிழ்நாடு அரசு தேர்தல் கால வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட வாழ்வாதாரக் கோரிக்கைகளை முழக்கமிட்டு எழுச்சியோடு, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில துணைப் பொதுச் செயலாளர் மு.சீனிவாசன் மற்றும் மாவட்ட துணைத் தலைவர் எஸ்.எம். வேலுமணி ஆகியோர் பேரணியை துவக்கி துவக்கி வைத்தனர். எழுச்சியோடு தோழர்கள் அணிவகுக்க, அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் கொடியினை மாநில துணைப் பொதுச் செயலாளர் ஏற்றி வைக்க அரசு ஊழியர் சங்கத்தின் கொடியை மாவட்ட தலைவர் தோழர்.ஜெகநாதன் ஏற்றினார்.

உழைக்கும் மக்கள் போராட்டத்தில் உயிர் நீத்த தோழர்கள், இயற்கையை பேரிடரில் உயிர்நீத்த தோழர்கள், மக்களுக்கான போராட்டங்களில் களம் கண்ட தோழர்கள் நம்முடைய சங்கத்தை காத்திட்ட, நம்முடைய சங்கம் வளர்த்த தோழர்கள் என அனைவரின் தியாகத்தையும் மாண்பையும் நினைவு கூறும் விதமாக மலர் தூவி அஞ்சலி செலுத்தி மாநாட்டு அரங்கிற்குள் தோழர்கள் அணிவகுத்தனர்.

மாவட்ட இணை செயலாளர் இரா.மாலதி ராணி அஞ்சலி தீர்மானம் வாசித்தார், மாவட்ட துணைத் தலைவர் எஸ்.எம்.வேலுமணி வரவேற்புரை நிகழ்த்தினார், மாநாட்டின் தொடக்கத்தில் மிக எழுச்சியோடு எஸ். கிருஷ்ணமூர்த்தி, இந்திய பொது தொழிலாளர் சங்கம், அவர்கள் உலகமும், தேசமும் மற்றும் தமிழ்நாட்டின் இன்றைய நிலையும் எதிர்கொள்ள வேண்டிய பணிகளையும் மிக உணர்வுபூர்வமாக எடுத்துரைத்து தொடக்கவுரை நிகழ்த்தினார். மாவட்ட செயலாளர் ப.செந்தில்குமார் கடந்த மாநாட்டுக்கும் இந்த மாநாட்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் நடைபெற்ற சங்க நிகழ்வுகளையும், ஊழியர்களின் தற்கால நிலையும், எதிர்கால கடமைகளையும் அறிக்கையாக முன் வைத்தார். மாவட்டப் பொருளாளர் ப. நடராஜன் கடந்த பேரவைக்கும் இந்த மாநாட்டிற்கும் இடைப்பட்ட வரவு செலவினங்களை விளக்கமாக எடுத்துரைத்து அறிக்கையாக சமர்ப்பித்தார். தோழமை தொழிற்சங்க, துறைச்சங்க நிர்வாகிகள் வாழ்த்துரையோடு மாநாடு மிக எழுச்சியோடு நடைபெற்றது. எதிர் வருகின்ற 3 ஆண்டுகளுக்கான சங்க பொறுப்பாளர்கள் தேர்வு நடைபெற்றது. எஸ்.ஜெகநாதன்-நெடுஞ்சாலைத்துறை மாவட்டத் தலைவராகவும் ப.செந்தில் குமார்-வருவாய் துறை மாவட்டச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட பொருளாளராக ப.நடராஜன்-அரசு

தொழிற்பயிற்சி துறை தேர்வு செய்யப்பட்டார். மாவட்டத் துணைத் தலைவர்களாக சையது உசேன் -வருவாய்த்துறை, அம்சவேணி சத்துணவு துறை, மாலதி ராணி- நெடுஞ்சாலைத்துறை, குணசேகரன்-மருத்துவத்துறை ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட இணை செயலாளர்களாக, இளையராஜா-கல்வித்துறை, பிரகலாதா-கிராம சுகாதார செவிலியர், மருத்துவத்துறை, சின்ன மாரிமுத்து-நெடுஞ்சாலைத்துறை,ராமலிங்கம்-நீதித்துறை ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநில துணைப் பொதுச் செயலாளர் புதிய நிர்வாகிகளை அறிமுகப்படுத்தி நாம் எதிர்கொண்டுள்ள நிலை குறித்தும் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் குறித்தும் மிகச் சிறப்பாக நிறைவுரையாற்றி மாநாட்டை சிறப்பித்தார்.

தன் நலன் பாராது உழைக்கும் மக்கள் போராட்டங்களில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட சங்க போராளிகளின் பணி நிறைவு விழா நடைபெற்றது. இதில் முன்னாள் மாவட்டத் தலைவர் சி.சு.பால்ராஜ் மாவட்ட துணைத் தலைவர் எஸ்.எம். வேலுமணி, சத்துணவு ஊழியர் சங்கத்தின் முன்னாள் மாவட்டத் தலைவர் ராமசாமி, அரசு ஆவண காப்பக பொறுப்பாளர் கிருஷ்ணராஜ், சத்துணவு ஊழியர் சங்கத்தின் முன்னாள் பொறுப்பாளர் பழனிசாமி ஆகியோரின் சங்க பணிகள் நினைவு கூறப்பட்டு பாராட்டு விழா நடைபெற்றது. மதிய உணவு இடைவேளைக்குப் பிறகு மாவட்ட மகளிர் துணைக் குழு பொறுப்பாளர் பிரகலதா தலைமையில் மகளிர் மாநாடு நடைபெற்றது, இதில் அகில இந்திய ஜனநாயக மாதர் சங்க மாவட்ட பொறுப்பாளர் ஜோதிமணி சிறப்புரை ஆற்ற, துறைச் சங்க ஆளுமைகள் உரை நிகழ்த்த மிக சிறப்பாக மாநாடு நடைபெற்றது.

## புதுக்கோட்டை மாவட்டம்




●

# வாசகர் கடிதம்

**– ம. அந்தோணிசாமி**

கண்களை கொஞ்சம் மூடிக்கொள்ளுங்கள் கிருஷ்ணப்பிரியா அவர்களின் கவிதை இறுகிப்போன உங்கள் விதிகளால் மூச்சு திணறுகிறேன். என்றவரிகள் சமூக கட்டுப்பாடு எனும் மனுதர்ம சாத்திரமன்றி வேறெதுவுமில்லை. எனவே கண்களை மூடுவதால்மட்டும் விதி எனும் சதியை மாய்க்கமுடியாது. சிந்தணைமாற்றமே தீர்வாகும். அதற்கு கிருஷ்ணப் பிரியாவின் கவிதைகள் வழுசேர்க்கவேண்டும். நவம்பர் மாத இதழ் தலையங்கம் தமிழக அரசின் அணுகுமுறை குறித்து மிகச் சரியாகவும் மென்மையாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அக்கா ஓர் வரம்.. என்.சுகன்யா அவர்களின் கவிதை எளிய வார்த்தைகளால் வாழ்க்கையின் அனுபவத்தை சொல்லாமல் சொல்லிவிட்டார் வாழ்த்துக்கள்.

பொதுச்செயலாளர் மேஜை ஏழு பக்க கட்டுரையாக வந்துள்ளது. தொடர்ந்து சாம்சங் போராட்டம் சுட்டிக்காட்டப்படுவது தவிர்த்து இருக்கலாம். சொல்ல வரும் கருத்தினை எளிமையாகவும் வலிமையாகவும் ஆழமாகவும் கூறி இருக்கலாம். ஆட்சியாளர்களின் கடமையையும் மக்களின் கடமையையும் சுட்டிக்காட்டியது மிகச் சரி. அகவிலைப்படி உயர்வு விலைவாசி உயர்வை ஈடு செய்கிறதா..

மு.பாஸ்கரன் அவர்களின் கட்டுரை காலத்தின் தேவை. இது குறித்து நாம் ஊழியர்களுக்கு வகுப்பு எடுப்பது இன்றைய இளைஞர்களுக்கு ஊதியம் படிகள் குறித்த புரிதலை உருவாக்கும். கையில வாங்கினேன் பையில போடல காசு போன இடம் தெரியல என்ற பட்டுக்கோட்டையாரின் சினிமா பாடல் என்றும் பொருந்துகிறது. சட்ட ஒற்றை புள்ளியை நோக்கி பிரகாஷ் அவர்களின் கட்டுரை நிர்வாக சீர்கேட்டையும் ஊழியர் படும் துன்பத்தையும் எச்சரிக்கை உணர்வோடு எடுத்து கூறியுள்ளது கொள்கை சார்ந்த நடவடிக்கையை எதிர்ப்பதில் இன்னும் பலத்தை நாம் அதிகரிக்க வேண்டும் இதற்கு இந்த கட்டுரை உதவும்.

தீண்டாமை சுவர் மா. பாலசுப்பிரமணியன் கட்டுரை சமூக சீர்கேட்டின் எல்லா அவலங்களும் அரசு துறையில் அரங்கேறும் அதனை கவனித்து களைய வேண்டிய பணி .அதில் திருப்பூர் மாவட்ட தோழர்கள் சிறப்பாக செய்துள்ளதற்கு வாழ்த்துக்கள். ●

கவிதை

# இயக்கம் அழைக்குது வா தோழா

**- கிருஷ்ண பிரியா**

காலம் சுழலுது கனவுகள் கனக்குது
களத்தில் பார்ப்போம் வா தோழா
கரங்கள் சேர்ந்தால் கதவுகள் உடைபடும்
கவலை உனக்கேன் வா தோழா

எல்லாம் ஒரு நாள் மாறும் என்றே
எத்தனை காலம் பொறுத்திருந்தோம்
எதுவும் இங்கே மாறா நிலையில்
எழுச்சி கொண்டு வா தோழா

வேலையில்லா இளைஞர் கூட்டம்
வேதனையோடு காத்திருக்க
வேரில் வெந்நீர் ஊற்றுதல் போல்
வேடிக்கை காட்டுது அரசாங்கம்

தொகுப்பூதியங்கள் மதிப்பூதியங்கள்
தொடரும் கதையாய் ஆயிற்று
தொடர்ச்சியாக போராடி நின்றும்
தொலைக்க முடியா நிலையாச்சு

கால முறையில் ஊதியம் கேட்டு
காலங்கள் தொடரும் போராட்டம்
காத்திருந்தும் கனியாத கோரிக்கை
கனிய வைப்போம் ஒற்றுமையால்

ஓய்வறியாமல் உழைக்கின்றோம்
நாம் ஓய்வூதியம் தான் கேட்கின்றோம்
ஓட்டைப் பானையில் ஊற்றிய நீராய்
ஓடுது நமது வாழ்நாளும்

கருணை இல்லா அரசின் முடிவால்
கருணை அடிப்படை நியமனங்கள்
கடலில் கரைத்த பெருங்காயம் போல்
கரைந்தே போச்சு வழியின்றி

தானாய் எதுவும் மாறிவிடாது
தணலாய் எழுந்து வா தோழா
தாமதம் செய்யும் ஒவ்வொரு நாளும்
தலைமுறை அழிக்கும் எழு தோழா

இப்படை தோற்கின் எப்படை வெல்லும்
இன்முகம் கொண்டு வா தோழா
இன்றே செய்வோம் நன்றே செய்வோம்.
இயக்கம் அழைக்குது வா தோழா

கவிதை

# கடல் புகும் நதியாவோம்...

- என்.வேல்முருகன்

பசித்திருக்கும்
புலிக்கூட்டமே..
புசித்திடப் புறப்படு..

மாவட்டங்கள் தோறும்
மாநாட்டு புயல்
மையம் கொண்டது போதும்...

கடலில் இருந்து புயல்
கரை தாண்டியதும் போதும்...

வலுவிழக்கும் புயலால்
சேதங்கள் உண்டாகும்...

வலுவடையும்
நமது
மாநாட்டு புயல்
தூத்துக்குடி கடல் நோக்கி
நகரும் போது...

அரசாங்க தூரோகங்களை ...

வாக்குறுதி தந்துவிட்டு
வாய்திறக்கா மௌனங்களை ...

காலமுறை ஊதியத்தை
தரமறுக்கும் இறுமாப்பை ...

பணி நீக்க காலத்தை
பணிக்காலம் ஆக்காத அலட்சியத்தை...

அவுட்சோர்ஸ் எனும்
அத்தக்கூலியில் பணியமர்த்தும்
அபாயத்தை ...
காலி பணியிடத்தை
நிரப்பாத
நேர்மையற்ற செய்கையை ...

இப்படி
ஆள்வோரின்
ஊழியர் விரோத
கொடுஞ்செயலை
தகர்த்தெரிந்து முன்னேறும் ...

முன்னேறும்
படைப்பிரிவில்
முதல் ஆனாய்
நாம் போவோம்...

வெட்டி வரச் சொன்னா
கட்டி வரும் எம் தோழா...

முத்துநகரில்
மாநாடு...
லட்சம் முத்துக்களை கோர்த்து
கோரிக்கை பேரணி
நடத்தும் மாநாடு...

கடற்கரை நகரம்
கலைகட்டும் அழகை
காண
விரைந்து நீயும் வா தோழா.

கடல் புகும் நதியாவோம் ...

## தி ரேடியோலாஜிகல் அசிஸ்டென்ட்ஸ் அசோசியேசன் TRAA மகளிர் கருத்தரங்கம்




தி ரேடியோலாஜிகல் அசிஸ்டென்ட்ஸ் அசோசியேசன் TRAA மாநில மையம் சார்பாக 01.12.2024 அன்று திருச்சியில் மகளிர் கருத்தரங்கம் நடைபெற்றது. மாநில தலைவர் தோழர் மொ.ஞானத்தம்பி தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் தோழர் ர.ஈஸ்வரன் வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் திருச்சி மாவட்ட தலைவர் தோழர். முனைவர் கா.பால்பாண்டி கருத்தரங்கத்தை துவக்கி வைத்து பேசினார். கருத்தரங்கத்தில் தோழர். சுஜாதா (எம்ஆர்பி செவிலியர் மேம்பாட்டு சங்கம்), ஆனந்தவள்ளி (த.நா. அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கம்), தோழர் அமுதவல்லி (TNGEA மகளிர் துணைக் குழு,) தோழர் ஆர். ஆர். ஷ்யாம்நாத் (மாநில தலைவர், Income tax Employees Federation), தோழர். செல்வி (கூட்டுறவுத்துறை துணைப்பதிவாளர் (ஓய்வு) ஆகியோர் கருத்துரை ஆற்றினர். தோழர். கிரிஜா. அகில இந்திய இணைச் செயலாளர் AIIEA, "பாலின சமத்துவமும், நமது கடமையும்" என்ற தலைப்பில் சிறப்பு கருத்துரையாற்றினார். முன்னாள் மூத்த உறுப்பினர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. 23 -10 -2024 அன்று பெருந்திரள் முறையீடு போராட்டத்தில் பங்கேற்ற மகளிர்க்கு நினைவு கேடயம் வழங்கப்பட்டது. தோழர்.சின்குவா,(கோவை) தோழர்.கௌரி(கோவை) ஆகியோர் கவிதை வாசித்தனர். தோழர் செல்வராணி மாநில துணைத்தலைவர் (தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்) நிறைவுறையாற்றினார். தோழர் ராஜா (மாநில துணைத்தலைவர் TRAA) நன்றி கூறினார். மாநில அமைப்பு செயலாளர் மு.இளங்கீரன் மாநில பொருளாளர் ராஜ்கமல், மாநில செயலாளர்கள் பிரேமா, தவமூர்த்தி மாநில துணைத்தலைவர் கணேஷ் பாபு ஆகியோர் கலந்து கொண்டனர். 136 பேர் தமிழக முழுவதும் இருந்து கலந்து கொண்டனர். பயனுள்ள கருத்தரங்கமாக அமைந்திருந்தது.

## அஞ்சலி



**தோழர்**
**காமா (எ) காமராஜ்**

வருந்துகிறோம், நமது சங்கத்தின் நாளிதழ் அரசு ஊழியர் மாத இதழ் சந்தா அனுப்புகை பணிசெய்து வந்த தோழர் காமா (எ) காமராஜ், (வயது 54) உடல் நலக்குறைவால் 03.12.2024 அன்று காலமானார். அவரது மறைவிற்கு தமிழ்நாடு அரசுஊழியர் சங்கத்தின் சார்பில் மாநிலத் தலைவர் (பொ) சா. டானியல ஜெயசிங், வடசென்னை மாவட்டத் தலைவர் வே. விஜயகுமரன், மாவட்டச் செயலாளர் ம.அந்தோணிசாமி, பொருளாளர் த.ஏழுதமலை, தென்சென்னை மாவட்டச் செயலாளர் த.முத்துகுமாரசாமிவேல், அலுவலகமேலாளர் வே.வெங்கடேசன், வடசென்னை மாவட்ட முன்னாள் செயலாளர் ஜெ. பட்டாபி ஆகியோர் அஞ்சலிசெலுத்தினர்.

Printed and Published by M. Anbarasu on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: A. SELVAM . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com